[பேரவைத் தலைவர்] [2022 பிப்ரவரி 8 முற்பகல் 10–20

மேற்காணும் கடிதத்தோடு 13–9–2021 அன்று பேரவை நிறைவேற்றி அனுப்பிய 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) திருப்பி அனுப்பப்பட்டுள்ளதன் நகலையும் பேரவைமுன் வைக்கிறேன்.

2. அரசினர் சட்டமுன்வடிவு (மறு ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021 (சட்டமன்றப் பேரவையில் 13–9–2021 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய செய்தியுரை மற்றும் மாண்புமிகு ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பப்பட்ட, 13–9–2021 ஆம் நாளன்று பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) ஆகிய இரண்டின்மீதும் உங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர் பேசுவதைக் கொஞ்சம் கேட்டுவிட்டுச் செல்லுங்கள். (குறுக்கீடு) நடந்ததை நான் சொல்கிறேன். நடக்கப் போவதை அவர் சொல்லவிருக்கிறார். கேட்டுவிட்டுச் செல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கத்துக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் உள்ளிட்ட இந்தப் பேரவைக்கு வணக்கம். 2006 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, தமிழ்நாட்டில் பல் மற்றும் மருத்துவக் கல்வி உட்பட அனைத்து தொழிற்கல்வி சேர்க்கையிலும் பொது நுழைவுத் தேர்வை இரத்து செய்வதற்காக, பொது மக்களின் கருத்து, ஏழையெளிய, நடுத்தரக் குடும்பங்களின் மாணவர்களால் இதற்கென தனிப்பயிற்சி பெற முடியாத சூழல் மற்றும் +2 தேர்வுடன் போட்டித் தேர்வுகளும் நடைமுறையில் இருக்கும்போது ஏற்படும்

2022 பிப்ரவரி 8] [திரு. மா. சுப்பிரமணியன்]

மன அழுத்தம் போன்ற பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக முனைவர் M. அனந்தகிருஷ்ணன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரையைப் பெற்ற பின்னர், இதற்கென ஒரு சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, அதற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று, சட்டம் இயற்றப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே. அந்த வகையில், +2 மதிப்பெண்களின் அடிப்படையில், நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீட்டைப் பின்பற்றி மருத்துவக் கல்வி சேர்க்கையில் மாநில அரசின் இடங்களுக்குப் பிரச்சினையின்றி, மருத்துவம் மற்றும் பல் மருத்துவ மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்தது. இந்த நிலையில் 'நீட்' முறை அறிவிப்பதற்கு முன்பே, தமிழ்நாடு நன்கு ஆராய்ந்து பொது நுழைவுத் தேர்வை நீக்கி, ஒளிவு மறைவற்ற ரீதியில் மாணவர் சேர்க்கையை நடத்தி வந்த நிலையில், மாநில அரசின் மருத்துவ இடங்களுக்கு அறிமுகப்படுத்திய 'நீட்' முறையை அறிமுகக் காலத்திலிருந்தே அதிகாரபூர்வமாகவும், சட்டரீதியாகவும், கொள்கைரீதியாகவும் மற்றும் சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவை நிறைவேற்றியும், தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்து வருகிறது.

மருத்துவக் கல்வி சேர்க்கைக்கான போட்டித் தேர்வுகளுக்காக எடுக்கப்படும் வகுப்புகள்மூலம் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்கு போட்டித் தேர்வு எதிர்மாறாக மற்றும் சிரமமானதாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பினரும் நீட் தேர்வு முறையை எதிர்க்கின்றார்கள்.

தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த உணர்வை மீறி, 2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு, 'நீட்' அடிப்படையில்தான் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ சேர்க்கை நடைபெற்று வருகிறது. இதிலிருந்து முறையாக விலக்கு பெற ஏற்கெனவே 2017–ல் இயற்றிய சட்டத்திற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவரால் ஒப்புதல் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், இந்த அரசு பொறுப்பேற்றவுடன், தமிழகத்தின் வணக்கத்துக்குரிய முதல்வராக, மாண்புமிகு தளபதி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், ஓய்வு பெற்ற நீதியரசர் மாண்புமிகு ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்து, இது குறித்து ஆராய்ந்து, விரிவாக அறிக்கையைப் பெற்று, அதன் பின்புதான் இந்தப் புதிய சட்டமுன்வடிவு 13–9–2021 இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இதற்கான விரிவான காரணங்கள் மற்றும் விளக்கங்கள்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2022 பிப்ரவரி 8

இந்தச் சட்டமுன்வடிவினை ஏற்கெனவே முன்மொழியும்போது தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உணர்வினைப் பிரதிபலிப்பதாக உள்ள இந்தச் சட்டமுன்வடிவை, அரசியல் சட்ட அமைப்பின்படி மாண்புமிகு குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவதற்கு, மாண்புமிகு ஆளுநரின் ஒப்புதலை பெறுவதற்காக 18–9–2021 அன்று அனுப்பப்பட்டது. அதன் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 14–10–2021 மற்றும் 27–11–2021 ஆகிய நாட்களில் மாண்புமிகு ஆளுநர் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்தியிருக்கிறார்கள். 8–1–2022 அன்று நடந்த அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் வாயிலாகவும் இதே கருத்து வலியுறுத்தப்பட்டது. இருப்பினும், 142 நாட்களுக்குப் பிறகு, சில காரணங்களைச் சுட்டிக்காட்டி, மீண்டும் இந்தச் சட்டமுன்வடிவினை சட்டமன்ற உறுப்பினர்களின் மறுபரிசீலனைக்கு மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு திருப்பி அனுப்பியுள்ளார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், இந்திய அரசமைப்பு சட்டம், உறுப்பு 200–ன்படி, சட்டமுன்வடிவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு, சட்டமுன்வடிவு குறித்த சந்தேகங்கள் அல்லது விளக்கங்கள் தேவைப்பட்டால், மீண்டும் மாண்புமிகு ஆளுநர்மூலம் இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமே தவிர, தன்னிச்சையாக ஆளுநர் சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவை திருப்பியனுப்பியுள்ளது அரசியல் சட்ட அமைப்பின்படி சரியான முடிவு அல்ல.

முற்பகல் 10–25

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கருத்தினையும், அதன் மீதான அரசின் விளக்கங்களையும் ஒவ்வொன்றாக உங்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து அதற்கான விளக்கங்களையும் இந்தப் பேரவைமுன் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு ஆளுநரின் கருத்து 1) ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் அறிக்கைதான், இந்தச் சட்டமுன்வடிவிற்கு அடிப்படை என்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பதில்: நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு, இதுகுறித்து விரிவாக ஆய்வு

2022 பிப்ரவரி 8] [திரு. மா. சுப்பிரமணியன்]

செய்து, பொது மக்களின் கருத்துகளைக் கேட்டறிந்து, சட்ட நுட்பங்களை ஆராய்ந்து, கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மாணவர் சேர்க்கையின் புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேயே அறிக்கையை அளித்துள்ளது. உண்மை நிலை என்னவென்றால், நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு இதுகுறித்து விரிவாக ஆய்வு செய்து பொது மக்களின் கருத்தினைப் பெற்றும், சட்ட நுட்பங்களை விரிவாக ஆராய்ந்தும், ஏழு பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

அரசைப் பொறுத்தமட்டில், இந்த ஏழு பரிந்துரைகள், மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் பல்வேறு செயலர்களைக் கொண்ட குழுவால் ஆராயப்பட்டு, அதிலுள்ள 3–வது பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டத் துறைமூலம் ஆராயப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவு சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகையால், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கூறியவாறு, ஏதோ அந்த அறிக்கையின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமுன்வடிவு இது என்பது முற்றிலும் தவறான கருத்து.

மாண்புமிகு ஆளுநரின் கருத்து 2) நீதியரசர் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் அறிக்கை, யூகங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், நீட் நோக்கமற்றது; நீட் தேர்வு தகுதிக்கு எதிரானது என்றும்; நீட் தேர்வினால் திறன் குறைவான, சமுதாயத்தில் முன்னேறிய, பணம் படைத்த மாணவர்கள் மருத்துவத் துறையில் இடம் பெறுவர் என்றும் மற்றும் மாநில பாடத் திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படும் தேர்வானது, நீட் தேர்விற்கான திறனை வளர்ப்பதில்லை போன்ற கருத்துகளை, யூகங்கள் என்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான பதில்: மாண்புமிகு ஆளுநர் அவர்களின் மதிப்பீடுகள் அனைத்தும் முற்றிலும் தவறான கருத்தாகும். மாண்புமிகு ஆளுநர் அவர்களின் கருத்து இந்த உயர்மட்டக் குழுவினை அவமானப்படுத்துவதுபோல் உள்ளது. நடைமுறையில் உள்ள உண்மை நிலையைக் கவனித்தால், பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற மற்றும் அதற்கான வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே நீட் தேர்வு எழுதுவது மற்றும் தேர்ச்சி பெறுவது எளிதாக அமைந்துள்ளது. சமூகத்திலுள்ள இதர பிரிவு மாணவர்களுக்கு, குறிப்பாக, கிராமப்புற அரசு மற்றும் இதர வகை பள்ளிகளில் பயிலும் பட்டியலின மற்றும் பழங்குடியின மற்றும் இதர நலிவுற்ற

[திரு. மா. சுப்பிரமணியன்] [2022 பிப்ரவரி 8

பிரிவினருக்கு இவ்வகைப் பயிற்சி எட்டாக் கனியாகவே உள்ளது. அதுமட்டுமின்றி, ஒன்றுக்கு மேற்பட்ட முறை நுழைவுத் தேர்வு எழுதி, மருத்துவக் கல்லூரிகளில் சேரும் வாய்ப்பு மாணவர்களுக்கு உள்ளதால், அந்த ஆண்டு 12–வது வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு மாறாக, பன்முறை நுழைவுத் தேர்வு எழுத வசதியுள்ள மாணவர்களுக்குச் சாதகமாக நீட் அமைந்துள்ளது. மேலும், நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையிலான உயர்மட்டக் குழு, மருத்துவப் படிப்புகளில் கடந்த ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரங்களை ஆராய்ந்து, இதனால் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை மாணவர்கள் நீட் தேர்வினால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும், அரசுப் பள்ளி மற்றும் தமிழ் வழியில் பயின்றவர்களையும் எதிர்மறையாக பாதிக்கிறது என்ற விவரத்தையும், புள்ளி விவரங்கள்மூலம் ஆய்வு செய்து, பொதுமக்களிடம் கருத்துக் கேட்டு அவற்றின் அடிப்படையில் விரிவான அறிக்கையை அரசுக்கு அளித்திருக்கிறது.

மாண்புமிகு ஆளுநரின் கருத்து 3) இயற்பியல் மற்றும் உயிரியல் தேர்வில், திறன் பற்றிக் கூறாமல், அனைத்து வகை பொது அறிவு குறித்து வரையறுக்கப்படாத கருத்துகள் கூறப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பதில்: 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்கள் அனைவரும், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களில் தேர்வு எழுதி, அந்தப் பாடங்களில் மாணவர்களின் அறிவு சோதிக்கப்படுகிறது. நீட் தேர்வு கட்டாயமாக்குவதற்கு முன்பு வரை 12 ஆம் வகுப்பு தேர்வின் அடிப்படையிலேயே மருத்துவப் படிப்பில் மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

ஏழையெளிய மாணவர்கள் படிக்கும் அரசுப் பள்ளிகளிலிருந்து 1 விழுக்காட்டிற்கும் குறைவாக மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேர்வது அரசுப் பள்ளியின் தரத்தைக் காட்டுவதாகும். இதனைக் கருத்தில் கொள்ளாமல், அறிக்கை நீட் தேர்வைக் குறை கூறியுள்ளது என்றும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முற்பகல் 10–30

சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டமுன்வடிவை மாண்புமிகு குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவதற்குப் பதிலாக, மாண்புமிகு ஆளுநர், நீதியரசரின் குழுவின் அறிக்கையில் உள்ள

2022 பிப்ரவரி 8] [திரு. மா. சுப்பிரமணியன்]

கருத்துகள் பற்றி தனது கருத்துகளைச் சுட்டிக்காட்டுவது அரசியல் அமைப்பின்படி சரியானது அல்ல. நீட் தேர்வு முறை கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழையெளிய மாணவர்களை எதிர்மறையாகப் பாதிக்கிறது. மேலும், நீட் தேர்வு, பள்ளிக்கூடங்களின் பயிற்று முறையை ஊக்குவிக்காமல், நீட் தனிப்பயிற்சியை ஊக்குவிக்கிறது. இதனால் ஒரு மாணவருக்கு 2 முதல் 3 ஆண்டுகள் பயிற்சி தேவை என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. இதற்கான பயிற்சிக் கட்டணங்களும் கூடுதலாக வசூலிக்கப்படுகின்றன. இதனால், பொருளாதாரத்தில் பின்தங்கிய, ஏழையெளிய, கிராமப்புற மாணவர்களுக்கும் நகர்ப்புற ஏழை மாணவர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நீட் தேர்வு முறை பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை மாணவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதனை உயர்மட்டக் குழு தனது அறிக்கையில் தெளிவாக விளக்கியுள்ளது. உண்மை நிலையும் அதுவே.

மாண்புமிகு ஆளுநரின் கருத்து 4) உயர்மட்டக் குழுவின் அறிக்கை ஒருதலைபட்சமானது.

பதில்: உயர்மட்டக் குழுவின் அறிக்கை ஒருதலைபட்சமான முடிவினை அளித்துள்ளது என்பது முற்றிலும் தவறான கருத்தாகும். புள்ளிவிவரங்களை ஆய்வு செய்தது மட்டுமின்றி, குழு பொது மக்களிடம் விரிவாகக் கருத்துக் கேட்டு, அதனை வல்லுநர்களுடன் ஆராய்ந்து அறிக்கை அளித்துள்ளது. சட்டமன்றத்திலிருந்த அனைத்துக் கட்சிகளும் நீட் தேர்வு முறைக்கு எதிரான சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளித்துள்ளன.

மாண்புமிகு ஆளுநரின் கருத்து 5) CMC, Vellore Association Vs. ஒன்றிய அரசு வழக்கில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, நீட் தேர்வை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது என மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பதில்: மாண்புமிகு ஆளுநர் அவர்கள், கொள்கை அடிப்படையில் இயற்றப்பட்ட சட்டத்தை அரசியல் சட்ட அமைப்பின் அடிப்படையில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்புவதைத் தவிர்த்துவிட்டு, ஓர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டியுள்ளது சரியான அணுகுமுறை அல்ல எனக் கருதுகிறேன். அரசியல் சட்ட அமைப்பில் மாநில அரசுக்கும் சட்டம் இயற்றுவதற்கான அதிகாரம் உள்ளது. எந்தவொரு சட்டமும், ஏதாவது ஒரு ஒன்றிய அரசின் சட்டத்திற்கு

[திரு. மா. சுப்பிரமணியன்] [2022 பிப்ரவரி 8

மாறாக இருந்தால், அதற்கு அரசமைப்பு சட்டப்பிரிவு 254(2)–ன்கீழ் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க மாநில அரசுகளுக்கு உரிமை உண்டு. சட்டமன்றத்தில் சட்டமே இயற்றக் கூடாது என்று ஓர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டுவது, அரசியல் சட்ட அமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பையே கேள்விக்குறியாக்கும் என்பதைப் பணிவன்புடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்தப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, தொடர்ந்து சமூக வலைதளங்களிலும் மற்றும் சில விவாதங்களிலும், நீட் தேர்வு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில்தான் உள்ளதாகத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வருகிறது. நீட் தேர்வினை 2010 ஆம் ஆண்டில் அப்போதைய இந்திய மருத்துவக் குழுமம் ஒரு விதிமூலம் கொண்டு வந்தது. தமிழ்நாடு அரசு அப்போது அதை எதிர்த்து ஒரு வழக்குத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தில் தடையாணை பெற்றது. இதுகுறித்து நிலுவையிலிருந்த அனைத்து வழக்குகளும் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றப்பட்டன. உச்ச நீதிமன்றத்தில் மறைந்த மாண்புமிகு நீதியரசர் அல்தாமஸ் கபீர் அவர்கள் தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு, இந்தச் சட்டம் அரசியல் சட்ட அமைப்பிற்கே எதிரானது என்று இந்த விதிமுறையை ரத்து செய்தது. இதனை அமல்படுத்தாமல், ஒன்றிய அரசு மறு ஆய்வுக்கு முயற்சி செய்து, அந்த மறு ஆய்வில் இந்தத் தீர்ப்பை மீண்டும் விசாரிக்கலாம் என்று கூறியது. இந்த நேரத்தில், உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு மாடர்ன் பல் மருத்துவக் கல்லூரி Vs. மத்தியப்பிரதேச மாநிலம் வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்ப்பினை வழங்கியது. இந்தத் தீர்ப்பின் சாராம்சம் பின்வருமாறு:

> "42–வது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, பட்டியல் II–ல் இருந்த பதிவு 11 நீக்கப்பட்டு, பட்டியல் III–ல், பதிவு 25–ல் இணைக்கப்பட்டது. பட்டியல் I, பதிவு 66–ல் மாணவர் சேர்க்கை உள்ளடங்கவில்லை."

மாடர்ன் பல் மருத்துவக் கல்லூரி Vs. மத்தியப்பிரதேச மாநிலம் வழக்கில் மாணவர் சேர்க்கை விவகாரத்தை மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பரிசீலித்துள்ளது. உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை குறித்து மத்தியப்பிரதேச அரசு இயற்றிய சட்டத்தின் செல்லுபடி குறித்து வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த அதிகாரம் மாநிலத்திற்கு இல்லை என்றும், ஒன்றிய அரசுக்கே உண்டு என்றும்

2022 பிப்ரவரி 8] [திரு. மா. சுப்பிரமணியன்]

வாதம் முன்வைக்கப்பட்டது. 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு பின்வருமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது:

> "எங்களைப் பொறுத்தவரை, பட்டியல் I, பதிவு 66 மிகவும் திட்டவட்டமானது மற்றும் குறிப்பிட்ட நோக்குடையது. அது, உயர் கல்வி நிறுவனங்கள் அல்லது ஆராய்ச்சி உள்ளிட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் தர நிலைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்ணயித்தல் தொடர்புடையது. ஒருங்கிணைத்தல் மற்றும் தர நிலைகளை நிர்ணயித்தல் என்னும் சொல், குறிப்பிட்ட தர நிலைகளை வரையறுத்தல் என்ற பொருளையும் உணர்த்தும். இவ்வாறாக, அத்தகைய உயர் கல்வி நிறுவனங்களுக்கு தரங்களைப் பரிந்துரைப்பதற்குப் பிரத்தியேக அதிகார வரம்பு ஒன்றியத்திற்கு வழங்கப்படுகிறது. ஆனால், இதில் தேர்வுகளை நடத்துதல் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை நடத்துதல் ஆகியன உள்ளடங்காது"

முற்பகல் 10–35

அதே வழக்கில், நீதியரசர் பானுமதி அவர்கள் வழங்கிய தனித் தீர்ப்பில், இது இன்னும் விரிவாகப் பின்வருமாறு விளக்கப்பட்டிருக்கிறது:

"எதிர்க்கப்பட்ட சட்டத்தின் செல்லும் தன்மையை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஏனென்றால், உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கையினை ஒழுங்குறுத்தும் மாநில அரசின் சட்டம் மாநிலங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகவே இருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால், மக்களின் நல்வாழ்வு மற்றும் வளர்ச்சிக்குப் பொறுப்பாகவுள்ள மாநிலத்திற்கு, மாணவர்களின் நலன் சார் நடவடிக்கைகளை மேற்கொள்வது கடமையே ஆகும். உயர் கல்வித் துறை, மாநிலத்தின் நலனையும் வளர்ச்சியையும் நேரடியாகப் பாதிக்கும் சூழலில் மக்கள் நலனையும் மேற்படி மாணவர்களின் உயர் கல்வியையும் மேம்படுத்தத் தேவையான N.I.T. போன்ற ஒன்றிய அரசால் நிதியளிக்கப்படும் நிறுவனங்கள் தவிர்த்து பிறவற்றில் மாணவர் சேர்க்கை நடைமுறை மற்றும் கட்டணங்கள் உள்ளிட்ட இன்ன பிறவற்றையும் மாநிலங்கள் மட்டுமே வகுக்க முடியும். ஏனென்றால், அம்மாநில மக்களின் தேவைகளையும்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2022 பிப்ரவரி 8

வாய்ப்புகளிலே உள்ள சமத்துவமின்மையையும் அம்மாநிலத்தைத் தவிர வேறு யாராலும் மதிப்பிட முடியாது."

இது நீதியரசர் பானுமதி அவர்கள் சொன்னது. (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலச் சட்டங்கள் மட்டுமே அம்மாநில பாடத் திட்டத்திலும் அம்மாநிலத்திலேயே பிற பாடத் திட்டங்களிலும் பயிலும் மாணவர்களுக்குச் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர முடியுமென்று சொல்லியிருக்கிறார்கள். மேற்கூறிய 5 நீதிபதிகள் கொண்ட அமர்வில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி மாநிலங்களுக்கு இதுபோன்ற சட்டமியற்ற அதிகாரம் உள்ளது. எனவே, இச்சட்டமுன்வடிவினை சட்டப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றிட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், உட்காருங்கள். நான் சொல்கிறேன். அனைத்து உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். உங்கள் வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசிவிட்டுப் போகலாம், இல்லையென்றால் உட்காரலாம். நான் எல்லோருக்கும் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) இல்லை, உங்களுக்கு இல்லை, இல்லை. முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பூவை ஜெகன் மூர்த்தி அவர்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் நன்றாகப் பேசுங்கள். பேசிவிட்டு, உங்கள் கருத்தைப் பதிவு செய்துவிட்டுப் போகலாம். உங்களுடைய கருத்தைப் பேசுவதற்கு நான் அனுமதிக்கிறேன். அதனால் நீங்கள் உட்கார்ந்து பேசிவிட்டுப் போகலாம். உங்கள் கருத்தைப் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. மு. ஜெகன் மூர்த்தி, நீங்கள் பேசுங்கள். 2 நிமிடங்கள் அல்ல, 5 நிமிடங்கள் பேசுங்கள். No problem. உட்காருங்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசிவிட்டுப் போகலாம்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நடைமுறை இருக்கிறது. அதன்படி பேசுங்கள். நீங்கள் பேசி முடித்துவிட்டு, கருத்தைப் பதிவு செய்துவிட்டு தாராளமாகப் போகலாம். மாண்புமிகு

2022 பிப்ரவரி 8] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், 100 சதவிகிதம் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து 1–2–2022 அன்று வரப்பெற்ற தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021). . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள் பேசி முடிக்கட்டும். பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) அவர்கள் பேச ஆரம்பித்துவிட்டார்கள். பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) சரி, நீங்கள் பேசுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட சட்டமுன்வடிவினை பாரதிய ஜனதா கட்சி ஆரம்ப நிலையிலேயே, அறிமுக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஏற்கெனவே அறிமுகம் செய்து, விவாதித்து அனுப்பப்பட்டது. திரும்ப உங்கள் கருத்து எதுவோ, மாண்புமிகு ஆளுநர் சொன்னதில் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: இதிலே ஏற்கெனவே ஒரு தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அன்றைக்கு பாரதிய ஜனதா கட்சி வெளிநடப்புதான் செய்தோம். ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அவையிலே யார் இருக்கிறார்களோ, அவையிலே வாக்கெடுக்கும்போது எந்த உறுப்பினர்கள் இருக்கிறார்களோ, அவர்கள்தான், (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளியே போய்விட்டார்கள். மீதி அவையிலிருக்கிறவர்கள் மத்தியிலே தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. அப்போது ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பெற்றதாகத்தான் கருதப்படும். ஆகையால்,

[திரு. துரைமுருகன்] [2022 பிப்ரவரி 8

இப்போதும் நீங்கள் வெளியே போய்விட்டால் நாங்கள் ஒருமனதாக நிறைவேற்றுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியே போவதற்கு இவ்வளவு பேச வேண்டாம். போவதாக இருந்தால் போங்கள். இல்லையென்றால் உட்காருங்கள். வரிசையாக வரும்போது பேசுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய கடிதத்தில் நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்களுடைய கருத்தைக் குறிப்பிட்டு நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்களை அவமானப்படுத்துவதுபோல் இருப்பதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக மாண்புமிகு ஆளுநர் அவர்களின் நோக்கம் அதுவாக இருக்காது. நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்களுடைய அறிக்கையில் Physics, Chemistry, Biology படித்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாமென்று சொன்னார்கள். ஆக, எல்லோரும் இங்கே, பெரும்பான்மையான. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அமைச்சராக இருந்தவர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, 12–வது வகுப்புவரை இயற்பியல், வேதியியல், உயிரியல் எல்லாமே படிக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் சொன்னேன். தவறாகச் சொல்லவில்லை.

திரு. நயினார் நாகேந்திரன்: நானும் தவறாகச் சொல்லவில்லை. 12 ஆம் வகுப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். வரிசையாக வரும்போது பேசுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: நான் சொல்லிவிடுகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். (குறுக்கீடு)

திரு. நயினார் நாகேந்திரன்: இல்லை, 12–வது வகுப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) திரு. ஜெகன் மூர்த்தி, பேசுங்கள். (குறுக்கீடு)

2022 பிப்ரவரி 8] [பேரவைத் தலைவர்]

திரு. ஜெகன் மூர்த்தி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. நயினார் நாகேந்திரன், நீங்கள் உட்காருங்கள். அனைத்து உறுப்பினர்களின் கருத்துகளையும் கேட்டுவிட்டு, பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பதில் சொல்லிவிட்டுப் போகலாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்; பதில் சொல்லிவிட்டுப் போகலாம்; தவறில்லை.

(பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய 1–2–2022 ஆம் நாளிடப்பெற்ற செய்தியுரை மற்றும் மாண்புமிகு ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பப்பெற்ற 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) ஆகியவை இன்றைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் பேரவைமுன் வைக்கப்பட்டு, விவாதம் நடைபெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு இரத்து செய்யப்பட வேண்டும் என்பதுதான் எல்லோருடைய எண்ணமாகும். எங்களுடைய புரட்சி பாரதம் கட்சியினுடைய கோரிக்கையும் ஆகும். ஆகவே, நீட் தேர்வைப்பற்றி என்னுடைய ஒரு சில கருத்துகளை இங்கே நான் பதிவு செய்கின்றேன்.

கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, கிராமப்புற மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொடுத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அது தற்போது, 15 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும். மேலும், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு 7 சதவிகிதம்; தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்கு 5 சதவிகிதம்; மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வியில் இட ஒதுக்கீடு வழங்குவதைப் போல, மருத்துவக் கல்வியிலும் 2 சதவிகிதம் ஒதுக்கப்பட வேண்டும். ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கும் மற்றும் விளையாட்டுத் துறையில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து நிகர்நிலை மருத்துவப் பல்கலைக்கழகங்களை தமிழ்நாடு அரசின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வந்து, சட்டம் இயற்றப்பட வேண்டும். மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். இதன்மூலம் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் அரசு நிர்ணயித்த

[திரு. மு. ஜெகன் மூர்த்தி] [2022 பிப்ரவரி 8 கல்விக் கட்டணங்களில் கிராமப்புற மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும். தமிழகத்திலுள்ள 16 சுயநிதி தனியார் கல்லூரிகளிலுள்ள மாநில ஒதுக்கீட்டு இடங்களில் தமிழக அரசு நிர்ணயித்த கட்டணத்தின்படி கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். ஆகவே, இப்படி இந்த மாணவர்களுக்கு இதுபோன்ற இட ஒதுக்கீடுகளை வழங்கினால் கண்டிப்பாக மாணவர்களின் சேர்க்கை அதிகரிக்கும் என்பது புரட்சி பாரதம் கட்சியினுடைய கோரிக்கையாக இருக்கின்றது. நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். அனைத்து உறுப்பினர்களும் 5 நிமிடங்களுக்கு மிகாமல் சுருக்கமாக தங்களுடைய கருத்துகளை அருமையாக எடுத்து வையுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியின் பிறப்பிடமாக இருக்கின்ற தமிழ்நாட்டில், நம்முடைய சமூக நீதிக் கோட்பாட்டிற்காக இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்குக் காரணமாக இருந்த தமிழ் மண்ணிலிருந்து, தமிழகச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட சட்ட மசோதாவை, தமிழக ஆளுநர் அவர்கள் திருப்பியனுப்பியிருப்பது என்பது ஏற்கக்கூடிய செயல் அல்ல. 8 கோடி மக்களை பிரதிநிதிப்படுத்துகின்ற தமிழக சட்டமன்றம் இயற்றியிருக்கின்ற அந்தச் சட்ட மசோதாவை மாண்புமிகு ஆளுநர் அவர்கள், பிரிவு 224–ன்படி மாண்புமிகு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதுதான் அவர் தனது அரசியல் கடமையைச் செய்ததாக அர்த்தம். மாநில அரசு அனுப்பி வைக்கின்ற சட்டங்களை, மாநிலப் பட்டியலில் இருக்கிற சட்டங்களை மறு ஆய்வுக்கு அனுப்பி வைப்பதற்கு ஆளுநருக்கு உரிமை இருக்கிறது. ஆனால், மத்திய அரசின் பட்டியலில் இருப்பதையோ, பொதுப் பட்டியலில் இருப்பதையோ கவர்னர் அவர்கள் திரும்பவும் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருப்பது என்பது இந்திய அரசியல் சாசன சட்டத்தை மீறிய ஒரு செயலாகும். இதை நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், நீதிபதி அல் தாமஸ் கபீர் அவர்கள் தலைமையிலான மூன்று நீதிபதிகளும் சரி அல்லது தனி நீதிபதியாக இடம்பெற்ற நீதிபதி பானுமதி அவர்களும் சரி, ஏற்கெனவே entrance examination என்று சொல்லக்கூடிய

2022 பிப்ரவரி 8] [திரு. தி. வேல்முருகன்]

நுழைவுத் தேர்வை இரத்து செய்வதற்கு நீதிபதி மிஸ்ரா அவர்கள் தலைமையிலான சென்னை உயர் நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புகளாக இருந்தாலும் சரி, இது சமூக நீதிக்கு, சமூக நீதியைக் காப்பதற்கு ஒரு மாநில அரசால் நடத்தப்படுகின்ற தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, அந்த மாணவர்களுக்கு அந்த மாநில அரசு வழிகாட்டுகிற நெறிமுறைகளின்படி நடைபெறுகின்ற இந்த மருத்துவக் கல்வி இட ஒதுக்கீட்டு உரிமையைப் பறிக்கின்ற செயல் ஏற்புடைய செயல் அல்ல. இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட, சிறுபான்மையின மாணவச் செல்வங்கள் இந்த நீட் என்கிற நுழைவுத் தேர்வின் காரணமாகப் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

முற்பகல் 10–45

குறிப்பாக, கடந்த கால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட, 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை, அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்குக் கிடைத்த அந்த ஒதுக்கீட்டை உறுதி செய்கிற ஒரு சட்டமாகத்தான் மீண்டும் அனுப்பப்படவிருக்கும் இந்தச் சட்ட மசோதாவை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வடிவமைத்திருக்கிறார்கள். தற்போது, பல்வேறு நீட் ஆதரவாளர்கள், இந்த நீட் தேர்வின் காரணமாகத்தான் கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள்; அது தவறு. தமிழ்நாட்டில் கடந்த ஆட்சியால் கொண்டுவரப்பட்டு, இந்த ஆட்சியால் நடைமுறைப்படுத்தப்படுகிற 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் கிராமப்புற ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுக்கு 400–க்கும் மேற்பட்ட இடங்கள் கிடைத்திருக்கின்றன.

குறிப்பாக, இந்த ஆண்டு 16 இலட்சத்து 14 ஆயிரம் பேர் நீட் தேர்வு எழுதுவதற்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு, தேர்வு எழுத விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால், தேர்வு எழுத வந்தவர்களுடைய எண்ணிக்கை 15 இலட்சத்து 44 ஆயிரம் பேர். கடந்த ஆண்டு 2 இலட்சம் பேர் தேர்வு எழுத வரவில்லை, இந்த ஆண்டு 70,000 பேர் தேர்வு எழுத வரவில்லை. ஏன்? நீட் தேர்வு என்று சொன்னாலே, மாணவர்களுக்கு அச்சம் ஏற்படுகிறது; பதற்றம் ஏற்படுகிறது. மாணவர்கள் உளவியல்

[திரு. தி. வேல்முருகன்] [2022 பிப்ரவரி 8

ரீதியாக பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆதலால், தேர்வு எழுத விண்ணப்பித்துவிட்டு, ஆண்டுக்கு 1 இலட்சம் பேர், 2 இலட்சம் பேர் என தேர்வு எழுதாமலேயே இருந்துவிடுகிறார்கள் என்றால், இந்த நீட் தேர்வு வரவேற்கக்கூடிய தேர்வா? மாணவர்களை மனச்சிதறலுக்கு உள்ளாக்குகிற தேர்வு.

தங்கை அனிதாவில் தொடங்கி, இன்றைக்கு 20–க்கும் மேற்பட்ட தமிழ்ச் சமூகத்தின் மாணவர்கள், 12 ஆம் வகுப்புத் தேர்வில் 1,175 மதிப்பெண் பெற்றவர்கள், நீட் தேர்வில் வெற்றி பெற முடியவில்லை என்று தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கிற அவலம் தற்போது இந்த மண்ணிலே ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் நீட் தேர்வு. ஆக, நீட் தேர்வு என்பது ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை உயர் கல்வி என்று சொல்லக்கூடிய மருத்துவக் கல்விக்கும், U.G., P.G. போன்ற உயர் கல்விக்கும் செல்லவிடாமல் தடுப்பதற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு தேர்வு முறை. அந்தத் தேர்வு முறையைத் தகர்த்தெறிவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இந்தச் சட்டமன்றத்தில் மீண்டும் இயற்றப்படுகிற இந்தச் சட்ட மசோதாவை தமிழக வாழ்வுரிமை கட்சி மனதார வரவேற்கிறது; பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்கிறேன், ஒரு தேர்வு என்று சொன்னால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், உரையை முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: அந்தத் தேர்வில் வெற்றி பெறுகிற அனைவருக்கும் இடம் கிடைக்க வேண்டும். ஆனால், நீட் தேர்வில் வெற்றி பெற்ற அனைவருக்கும் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு இடம் கிடைக்கிறதா? கடந்த ஆண்டு 8 இலட்சம் பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஆனால், இந்தியா முழுவதும் 2 இலட்சம் இடங்கள் மட்டுமே உள்ளன. P.G.–க்கு 14 ஆயிரம் இடங்கள் உள்ளன. ஆனால், தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்றவர்கள் 1½ இலட்சம் பேர். ஆக, ஒரு தேர்வு நடத்தப்படுகிறது. அந்தத் தேர்விலே வெற்றி பெற்றவர்களுக்கு உரிய இடங்களை வழங்க முடியாத ஒரு தேர்வு முறை ஏற்புடையதா என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மருத்துவக் கல்லூரியின் கல்விக் கொள்ளையைத் தடுப்பதற்கு இந்த நீட் தேர்வு காரணம் என்று, இன்னும் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். தற்போது P.G.–க்கு 50 இலட்சம் ரூபாய் கட்டணம்,

2022 பிப்ரவரி 8] [திரு. தி. வேல்முருகன்]

white–ல் amount வாங்கிக்கொள்வதற்கு மருத்துவக் கல்லூரிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தற்போது சுயநிதிக் கல்லூரிகளில், நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் 23 இலட்சம் ரூபாய். கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறதா? 5 ஆண்டுகளுக்கு என்ன கட்டணம்? சுமார் 1½ கோடி ரூபாய் இருந்தால்தான் ஒரு மாணவன் மருத்துவக் கல்வியைக் கற்க முடியும்.

நீட் தேர்வுக்கான coaching centre–ல், கட்டணம் 3 இலட்சம் ரூபாய் முதல் 5 இலட்சம் ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது. ஆக, 3 இலட்சம் ரூபாய், 5 இலட்சம் ரூபாய் என செலவு செய்து, இந்த coaching centre–ல் சேர்ந்து, பயின்று, தேர்ச்சி பெறுகிறார்கள். அவ்வாறு தேர்ச்சி பெற்றாலுங்கூட, தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும், தமிழ்நாடு முழுவதும், இந்தியா முழுவதும் மருத்துவம் படிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறதா என்றால், இல்லை. ஆக, நீட் தேர்வு என்பது ஒரு சமூக அநீதியான ஒரு தேர்வு, ஏழையெளிய மக்களை மருத்துவம் பயில நுழையவிடாத ஒரு தேர்வு, உயர் கல்வி படிக்கவிடாமல் தடுக்கிற ஒரு தேர்வு. ஆக, அந்தத் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும்; இந்த மண்ணிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றால், இந்தியாவிற்கே வழிகாட்டியாக சமூக நீதி இயக்கத்தை வழிநடத்துகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கண்டிப்பாக மாநில உரிமைக்குரிய இந்தக் கல்வி உரிமையை பொதுப் பட்டியலிலிருந்து மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வந்து, இந்தியாவிற்கு வழிகாட்டுவதற்கு இந்தச் சட்டமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்து, மீண்டும் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படுகிற வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நீட் மசோதாவை தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக வரவேற்று, அமர்கிறேன். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றம் இரண்டு முறை தீர்மானம் இயற்றி, ஆளுநருக்கு அனுப்பப்பட்ட அந்த மசோதாவை இன்றைக்கு மீண்டும் நிறைவேற்றி, அனுப்ப வேண்டிய கட்டாயத்திற்குத்

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2022 பிப்ரவரி 8

தள்ளப்பட்டிருக்கிறோம். இது தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஒரு தனிப்பட்ட முடிவு கிடையாது அல்லது ஆளுங்கட்சியினுடைய தனிப்பட்ட முடிவு கிடையாது. சட்டமன்றத்தில் இரண்டு முறை தீர்மானம், இப்போது மூன்றாவது முறை தீர்மானம், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டங்கள், குடியரசுத் தலைவரை நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்க முயற்சித்தது, உள் துறை அமைச்சரைச் சந்தித்தது, முதலமைச்சர் அவர்களே ராஜ் பவனுக்குச் சென்று ஆளுநர் அவர்களைச் சந்தித்து வந்தது, இப்படி பல்வேறு நடைமுறைகளுக்குப் பிறகு, மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை அமைத்து, மாணவர்களின் பெற்றோர்களுடைய மாணவர்களுடைய கருத்துகளைக் கேட்ட பிறகுதான், இன்றைக்கு மறுபடியும் நாம் ஆளுநருக்கு இந்த அழுத்தத்தைக் கொடுக்கிறோம். இது 8 கோடி தமிழர்களுடைய ஒருமித்த முடிவு. ஆனால், ஆளுநர் அவர்கள் தங்களுடைய கடிதத்திலே, 'தான் பார்த்தேன், தான் பரிசீலனை செய்தேன், தனக்குத் தெரிந்தவரை' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியென்றால், 8 கோடி மக்கள் முடிவெடுத்த ஒரு தீர்மானத்தை, ஒரு முயற்சியை ஆளுநர் என்ற மரியாதைக்குரிய ஒரு தனிப்பட்ட மனிதர் இன்றைக்கு திருப்பி அனுப்பியிருக்கிறார். அதுதான் வேதனையாக இருக்கின்றது. அப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையிலே, ஆளுநர் அவர்களுடைய கடிதத்திலேயிருந்த பல்வேறு விஷயங்களை நம்முடைய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே எனக்குப் புரிந்தவரை ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன். அதிலே 6–வது பத்தியிலே, '46 மற்றும் 47–வது பிரிவில் சமூக நீதியை, ஏழையெளிய மக்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு உறுதி செய்வது குறித்து குறிப்பிடப்பட்டிருக்கிறது' என்று சொல்லியிருக்கின்றார். அதே இடத்திலே இன்னொன்றையும் குறிப்பிடுகின்றார், நாட்டினுடைய மருத்துவம் என்பது மிக முக்கியம் என்று குறிப்பிடுகின்றார். அப்படியென்றால் என்ன அர்த்தம்? தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள் மருத்துவர்களானால் நல்ல மருத்துவர்களாக உருவாகமாட்டார்களா? இதனால் இந்த நாட்டினுடைய பாதுகாப்புக்கு, மருத்துவத்திற்கு ஏதாவது குந்தகம் வந்துவிடுமா? இது ஏதோ உள்நோக்கம் கற்பிப்பதுபோல்தான் இருக்கிறது. உள் மனதிலே என்ன தோன்றியிருக்கிறது என்பதை இன்றைக்கு நாம் புரிந்துகொள்ள முடிகிறது. அப்படியென்றால், அவர்களுடைய நோக்கம் என்ன என்பதை

2022 பிப்ரவரி 8] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

நாம் தெரிந்துகொள்ளும்போது, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள் மற்றும் ஏழையெளிய மக்களுடைய அந்த உரிமைகளைப் பறிக்கின்ற விதமாகத்தான் இன்றைக்கு ஆளுநருடைய கடிதம் நமக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

இன்னும் ஒன்று, நீட் தேர்விலிருந்து ஆரம்பித்து, இது கட்டாய நீட் தேர்வு மட்டுமல்ல, தொடர்ந்து மாநில அரசினுடைய உரிமைகளைப் பறிக்கின்ற செயல்களாக ஒரே நாடு–ஒரே ரேஷன் அட்டை, ஒரே தேசம்–ஒரே பத்திரப் பதிவு, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணி விதிகளில் ஒரு சட்டத் திருத்தம், இப்படி பல்வேறு விஷயங்களை,ஒவ்வொன்றாகஒவ்வொன்றாகமாநிலஉரிமைகளைப் பறிக்கின்ற விதமாக நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், நீட் தேர்வை அமல்படுத்துவதற்கான ஓர் எதிர் போராட்டம் என்பது, இந்தியா முழுவதும் இருக்கிற அனைத்து மாநிலங்களினுடைய உரிமைகளையும் பாதுகாக்கின்ற ஒரு நடவடிக்கையினுடைய ஆரம்பமாக நாம் பார்க்கின்றோம். இன்றைக்கு இருக்கிற பிரதமரே குஜராத் மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, மாநில உரிமைகளுக்காக அங்கே ஒன்றிய அரசிலே போராடியவர். அப்படிப் போராடியவர் இன்றைக்கு மாநில உரிமைகளைப் பறிக்கின்ற ஒரு விஷயத்தைச் செய்கிறார் என்பது வருத்தமாக இருக்கிறது. *1947* ஆம் ஆண்டு சுதந்திரம் அடைவதற்கு முன்பு நாம் எல்லோரும் லண்டனிலிருந்து ஆட்சி செய்யப்பட்டோம். ஆனால், மறுபடியும் இப்போது டெல்லியிலே இருந்து ஆட்சி செய்யப்படுவதற்கான அத்தனை முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மொத்தத்தில், மாநில உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய கடமை, அந்த உரிமைகளுக்காகப் போராடுகின்ற ஓர் அமைப்புக்குத் தலைமையேற்கின்ற கடமை தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறதென்று, அனைத்து மாநிலங்களும் நினைக்கின்றன. அதைத் தமிழக முதலமைச்சர் முன்னெடுத்திருப்பதை நாங்கள் கண்டிப்பாக வரவேற்கின்றோம்.

முற்பகல் 10–55

அதேபோல, இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், அரசுப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள், *7.5* சதவிகித இடஒதுக்கீட்டிலே இன்றைக்குப் பலனடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அதனால், இன்றைக்கு அரசுப் பள்ளிகளிலே மாணவர் சேர்க்கை அதிகமாகியிருக்கிறது. அப்படி அதிகமாகியிருக்கிற நேரத்திலே *7.5* சதவிகித இட ஒதுக்கீடு என்பது போதாது. அதை

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2022 பிப்ரவரி 8

15 சதவிகிதமாக உயர்த்துவதற்கு நம்முடைய அரசு கண்டிப்பாக முயற்சிக்க வேண்டும். அது இன்றைய தேவையாக இருக்கிறது. 400 பேர் அங்கு அரசுப் பள்ளிகளில் படிப்பதற்குப் பதிலாக 1,000 பேர் படித்தால் அதைவிட மகிழ்ச்சியானது வேறொன்றும் கிடையாது. அதற்கு மேலே, மாநிலத்தினுடைய பாடத் திட்டத்திலே படிக்கின்ற மாணவர்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு மாநிலம் முழுவதும் CBSE பாடத் திட்டத்திலே படிப்பதற்கான ஒரு மோகம் உண்டாகியிருக்கின்றது. அதை மாற்ற வேண்டுமென்று சொன்னால், தமிழக அரசினுடைய பாடத் திட்டத்திலே மாணவர்களும், பெற்றோர்களும் ஆர்வம் காட்ட வேண்டுமென்று சொன்னால், மாநில அரசினுடைய பாடத் திட்டத்திலே படிக்கின்றவர்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொடுப்பதற்கு நாம் முன்வர வேண்டும். அதனால், இன்றைக்கு இந்த நீட் தேர்வு முறையிலே நீதி கிடைக்கின்றவரை, நம்முடைய அரசு ஜனநாயக முறைப்படி அந்த நீட் தேர்வு நீர்த்துப் போகக்கூடிய வகையிலே அத்தனை முயற்சிகளையும் செய்துதான் ஆக வேண்டும். நீதி கிடைக்கின்றவரை அது தொடர வேண்டும். அதனால், இன்றைக்கு சட்டமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பிலே முழு மனதாக நான் வரவேற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீட்டு என்று சொல்லி அன்று ஒதுக்கி வைத்தார்கள். இன்று நீட் என்று சொல்லி பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, ஒடுக்கப்பட்ட மாணவர்களை ஒதுக்கி வைக்கக்கூடிய அந்த நுழைவுத் தேர்வு தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை என்று மீண்டும் ஆளுநருக்கு அனுப்பக்கூடிய தீர்மானத்தை, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நான் வழிமொழிகின்றேன்.

செப்டம்பர் 13, 2021–ல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, தமிழ்நாட்டிற்கு நீட் தேவையில்லை என்று ஏகமனதாக நிறைவேற்றிய

2022 பிப்ரவரி 8] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

தீர்மானத்தை திருப்பி அனுப்புவதற்கான காரணங்களை மேதகு ஆளுநர் அவர்கள் அளித்திருக்கின்றார். அதனைப் படிக்கும்போது மனம் மிகவும் வேதனை அடைகிறது. இங்கே இருக்கக்கூடியவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆளுநர் என்பவர் ஒன்றிய அரசினால் இங்கே நியமிக்கப்பட்டவர். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினுடைய நடவடிக்கைகளுக்கு இப்படி ஆளுநர்கள் எல்லாம் முட்டுக்கட்டை போடுவார்கள் என்பதை உணர்ந்துதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'ஆட்டுக்கு தாடி தேவையில்லை, மாநிலங்களுக்கு ஆளுநர் தேவையில்லை' என்று குறிப்பிட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக முதலமைச்சரானபோது, பி.வி. ராஜமன்னார் குழுவை அமைத்தார்கள். அந்த ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கையிலே, "ஆளுநர் என்பவர் ஒன்றிய அரசினுடைய முகவராக இங்கே செயல்படக் கூடாது" என்று தெளிவாகப் பரிந்துரைத்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, 1974–லே உச்ச நீதிமன்றத்திலே திரு. ஷம்ஷெர் சிங் வழக்கிலே, 7 நீதியரசர்கள் கொண்ட அந்த அமர்வு வழங்கிய தீர்ப்பிலே, "ஆளுநரின் அதிகாரம் England மன்னரைப் போன்றது அல்ல, சட்டமன்றங்களின் அதிகார வரையறைக்குட்பட்டும், மாநில அமைச்சரவையின் ஆலோசனைகளுக்குட்பட்டும்தான் ஆளுநர் செயல்பட முடியும்" என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த நேரத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இன்று இந்தியாவிற்கே முன்னுதாரணமாக, தமிழகத்திலே தழைத்தோங்கி வரக்கூடிய சமூக நீதி, இந்தியா முழுவதும் விழித்தோங்க வேண்டுமென்பதற்காக ஒரு குழுவை, ஓர் இயக்கத்தைக் கண்டிருக்கின்றார்கள். அதை நெஞ்சார வரவேற்கின்றோம்.

முற்பகல் 11–00

அதேபோல, இந்தியாவிலே இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு ஆளுநர்கள் தேவையில்லை என்ற ஓர் இயக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்த வேண்டும். அது இந்தப் பிரச்சினைக்கு, மாநிலங்களுடைய உரிமைகளுக்கெல்லாம் தீர்வாக அமையும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆளுநருடைய அந்தக் காரணங்களைப் படிக்கும்போது மனம் வேதனை அடைந்ததற்கு மிக முக்கியமான காரணம், நீதியரசர் ஏ.கே. ராஜன் குழுவினுடைய அறிக்கையைப் பற்றி 'It is reflecting the jaundiced view of the Committee'

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2022 பிப்ரவரி 8 என்று குறிப்பிடுகின்றார். அதாவது, அந்த ஏ.கே. ராஜன் குழுவினுடைய காமாலை பார்வையினுடைய பிரதிபலிப்பாக அந்த அறிக்கை இருக்கின்றது என்று சொன்னது, வெறுமனே ஏ.கே. ராஜன் குழுவைப் பற்றி மட்டும் சொன்ன ஒரு கருத்தாக நான் கருதவில்லை. ஒட்டுமொத்த தமிழக மக்களையே, நீட் தேர்வுக்கு எதிராக நிற்கக்கூடியவர்களையே 'காமாலைப் பார்வை' என்று சொன்னால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அவர்களுடைய காரணகாரியங்களை நான் படித்துப் பார்க்கும்போது, இங்கொன்றும், அங்கொன்றுமாக திரு. ஏ.கே. ராஜன் குழுவின் அறிக்கையிலுள்ள சில எடுத்துக்காட்டுகளைச் சொல்லி, தன்னுடைய எண்ணத்திற்கேற்ப, தன்னுடைய கருத்தைத் திணித்திருக்கின்றார். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், நீட் தேர்வுக்கு முன்பு அரசுப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுடைய சேர்க்கை, நீட் தேர்வில் அரசுப் பள்ளிக்கூட மாணவர்களுடைய பங்களிப்பைப் பற்றிச் சொல்லும்போது, 1 சதவிகித மாணவர்கள், அதாவது, 30, 38 மாணவர்கள் மட்டும்தான் சேருகின்றார்கள். This shows the sorry state of the State–run Government Schools என்று சொல்கிறார். No, ** இது மாநில அரசாங்கத்தினுடைய, மாநில அரசு நடத்தக்கூடிய அரசுப் பள்ளிக்கூடங்களினுடைய ** காட்டவில்லை. உங்களுடைய ** சுட்டிக்காட்டுகின்றது. சவால் விட்டுப் பேச முடியும். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசுப் பள்ளிகளுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு Governor அவர்களைப் பற்றி ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர், கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு ஒப்பாக, U.P.–யிலுள்ள அரசுப் பள்ளிகளைச் சொல்ல முடியுமா? அரசுப் பள்ளி மாணவர்கள் எந்த நிலையிலே படிக்கின்றார்கள்? அவர்களுடைய சமூக நிலை என்ன? அவர்கள் உழைக்கும் குடும்பத்தைச் சேர்ந்த, அன்றாடம் கூலித் தொழில் செய்பவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள். அவர்கள் அரசுப் பள்ளிக்கு வருகிறார்கள். பள்ளி முடிந்த பிறகு பகுதிநேர வேலைக்குச் செல்கிறார்கள். தாய், தந்தையருடைய பணிகளுக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 பிப்ரவரி 8] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

உதவியாக இருக்கின்றார்கள். வசதி படைத்த பிள்ளைகளைப்போல, பள்ளிக்கூடம் முடிந்த பிறகு வீட்டிற்கு வந்து சிற்றுண்டி உண்டுவிட்டு, தொலைக்காட்சியைப் பார்த்துவிட்டு, ஆயாசமாக நேரத்தைக் கழிக்கக்கூடியவர்கள் அல்ல நம்முடைய அரசுப் பள்ளிக்கூட மாணவர்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம் அனைவருக்கும் தெரிந்த உண்மையை ஆளுநர் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்காக எத்தனையோ திட்டங்களை, அந்த மாணவர்களின் திறன் மேம்பாட்டுக்காக நம்முடைய அரசு ஏராளமாகச் செய்து வருகிறது. (மணியடிக்கப்பெற்றது) . . . இது தவறான ஒன்று என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்துவிடுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாணவர்களுக்கு எல்லா வகையான அறிவாற்றலும் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி, Physics, Chemistry, Biology–யை திரு. ஏ.கே. ராஜன் குழு தேவையில்லை என்று சொல்வதைப்போல ஒரு கருத்தை ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு என்ன நிலை என்றால், ஒரு வகுப்பில் 20, 30 மாணவர்கள் இருக்கிறார்களென்றால், 4 மாணவர்கள் மட்டும்தான் நீட் தேர்வு எழுதுகிறார்கள். நீட் தேர்வு வந்தபிறகு, Physics, Chemistry, Biology ஆகிய subjects படிக்கின்ற மாணவர்கள் மட்டும்தான் அதிகமாக மருத்துவக் கல்லூரிகளில் சேர்கிறார்கள். Maths தேவை இல்லையா; ஆங்கிலம் தேவையில்லையா; நீட் தேர்வு எழுதி, pass செய்து, டாக்டரான பிறகு, ஒரு நோயாளியைச் சந்திக்கக்கூடிய மருத்துவருக்கு பொது அறிவு தேவையில்லையா; அவர் அந்த நோயாளியைப் பற்றிய பின்புலத்தை அறிய தேவை இல்லையா? இதைத்தான் திரு. ஏ.கே. ராஜன் குழு, பொதுவாகச் சொன்னதை நீட் தேர்வுக்கு என்று ஆளுநர் அவர்கள் திணிக்க முனைந்ததையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் CMC வழக்கை மேற்கோள் காட்டுகிறார். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல, 2016 ஆம் ஆண்டு Modern Dental College வழக்கிலே வழங்கப்பட்ட தீர்ப்பில் நிச்சயமாக, மாநில

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [*2022 பிப்ரவரி 8*

அரசுக்கு, ஒன்றிய அரசு இயற்றிய சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பதற்கான தகுதி இருக்கிறதென்று சொல்லியிருக்கின்றது. அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு, ஜனவரி 2022 இல் மருத்துவக் கல்லூரியில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்த வழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கைத் தொடுத்தவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநிலங்களவை உறுப்பினர் திரு. வில்சன் அவர்கள். அந்த வழக்கிலே மிகத் தெளிவாக, வெறுமனே மதிப்பெண்கள் மட்டும் தகுதியாக இருக்க முடியாது என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழலில், நிச்சயமாக தமிழ்நாட்டுக்கு நீட் தேவையில்லை; நீட் இல்லாத தமிழ்நாட்டை நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய தலைமையிலே உருவாக்க வேண்டும்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள். (குறுக்கீடு)

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். அதற்கு தமிழர்கள் அனைவரும், சமூக நீதியில் அக்கறையுள்ள தமிழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, களத்திலே நின்று, நீட் என்ற அரக்கனை ஒழிப்போம். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரி, சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட சட்டமுன்வடிவை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று வலியுறுத்தியும்கூட, ஆளுநர் அவர்கள் அதற்கு இசைவளித்து ஒன்றிய அரசின் பரிந்துரைக்கு அனுப்பவில்லை. இந்நிலையில், நீட் தேர்வு அவசியம் என்பதை மேலோட்டமாக ஆளுநர் அவர்கள் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அரசமைப்புச் சட்டத்தின்கீழ் இயங்கும் ஆளுநர் அவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் உரிமைகள், கடமைகளுக்கு உரிய மதிப்பளித்து தமது கடமையை நிறைவேற்ற வேண்டும். இந்நிலையில், நீட் தேர்விற்கு விலக்களிக்கும் சட்டமுன்வடிவை

2022 பிப்ரவரி 8] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

தமிழக ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பியிருப்பதும், அதற்கு அவர் கூறியிருக்கும் காரணங்களும் ஏற்கத்தக்கதல்ல. மருத்துவப் படிப்புகளுக்கு நீட் நுழைவுத் தேர்வு திணிக்கப்பட்டதால், சமூக அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அனிதா போன்ற நமது பிள்ளைகள் 17 பேர், +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தும், மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காமல் போனதற்கு காரணம், நீட் தேர்வு. அதன் காரணமாகவே, நம்முடைய பிள்ளைகள் தங்களது இன்னுயிரைப் பறி கொடுத்திருக்கின்றார்கள். இனியும், இத்தகைய உயிர்ப்பலிகள் தொடர்வதை அனுமதிக்கக் கூடாது என்பதற்காகத்தான் 13–9–2021 அன்று நம்முடைய சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு 2021 நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. பொதுப் பட்டியலுக்கு கல்வி மாற்றப்பட்டு விட்டது; ஆனாலும், கல்வி தொடர்பான சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது என்பதை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்திருக்கிறது.

2016, மே மாதம் 2–ம் தேதி உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் கூறப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தின்மூலம் பொது நுழைவுத் தேர்வு என்று நீட் நடைமுறைக்கு வருமானால், அதன் விளைவாக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே மாறுபட்ட நிலைப்பாடு உருவாகுமானால், அத்தகைய முரண்பாட்டை இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 254–ன்கீழ், தீர்த்துக்கொள்ளலாம். இதனடிப்படையில், மருத்துவ மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் ஒழுங்குப்படுத்தும் அதிகாரம் ஆகியன மாநில அரசுகளிடமிருந்து மறைந்து போகவில்லை. அரசமைப்புச் சட்டத்தின்படி, ஆளுநரின் அதிகாரங்கள் என்பது வரம்புக்குட்பட்டதவைதான். அரசமைப்புச் சட்டப் பிரிவு 163–ன்கீழ், ஆளுநர் அவர்கள் தன் விருப்புரிமைப்படி செயல்பட வேண்டிய தருணங்களைத் தவிர, மற்ற சமயங்களில் மட்டும் அமைச்சரவையின் உதவியுடனும், ஆலோசனையுடனும் செயல்பட வேண்டும். அரசமைப்பின் 42–வது திருத்தச் சட்டத்தின்மூலம் அமைச்சரவையின் ஆலோசனைப்படியே குடியரசுத் தலைவர் அவர்கள் செயல்பட வேண்டுமென்ற பிரிவு 74–ல் திருத்தம் செய்யப்பட்டது. அதுபோலவே ஆளுநர் அவர்களும் செயல்பட வேண்டுமென்று பிரிவு 163–ல் உரிய திருத்தங்கள் செய்யப்படவில்லை என்றாலும், பொதுவாக, நமது அமைச்சரவையின் ஆலோசனைப்படி அல்லாமல் ஆளுநர்

[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்] [2022 பிப்ரவரி 8 அவர்கள் செயல்படக் கூடாது என்று நீதிமன்றங்கள் பல வழக்குகளில் தீர்ப்பு அளித்திருக்கின்றன.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Health is mainly not an issue of Doctors, hospitals and social service. It is an issue of social justice. மருத்துவம் என்பது, சமூக நீதி சம்பந்தப்பட்டது. நம் நாட்டின் உயர்ந்த பதவியில் இருக்கின்ற குடியரசுத் தலைவருக்கு என்ன உயர் சிகிச்சை கிடைக்கின்றதோ, அது ஒரு சாமானியனுக்கும் கடைக்கோடி மக்களுக்கும் கிடைக்க வேண்டும். அதற்கு கடைக்கோடி பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கும் மருத்துவப் படிப்பு கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். ஆகவே, நம்முடைய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் மனதார வரவேற்கின்றேன். இதை முன்னெடுத்திருக்கும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் எங்கள் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள். இப்போது பேசிய உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்கள் மாதிரி பேசி, முடியுங்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மண்ணில் சமூக நீதியை நிலைநாட்டிட தந்தை பெரியார், அயோத்திதாசபண்டிதர், மா.பொ.சி., தோழர் ஜீவா, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்றோருடைய அரை நூற்றாண்டு பங்கு போற்றக்கூடியது. இன்றைக்கு இந்தியாவிற்கே சமூக நீதிக்கு வழிகாட்டியாக தமிழகம் திகழ்கிறது. சமூக நீதியின் பிறப்பிடமாகத் திகழ்கின்ற தமிழ்நாட்டில், சமூக நீதியின் ஆணி வேரில் வெந்நீரை ஊற்றுவதைப்போல, இன்றைக்கு ஒன்றிய அரசு மருத்துவப் படிப்பிற்கான நீட் நுழைவுத் தேர்வைத் திணித்த பிறகு, தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புற ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மற்றும் தமிழ் வழியிலே அரசுப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுடைய மருத்துவக் கல்விக் கனவு என்பது, கலைந்துபோயிருக்கிறது.

2022 பிப்ரவரி 8] [திரு. ட்டி. இராமச்சந்திரன்]

அரியலூர் மாணவி அனிதா தொடங்கி, இன்றைக்கு தமிழகத்திலே 13–க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாணவர்களுடைய கல்வி உரிமையை நிலைநாட்டும் வகையிலே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையிலே சிறந்த கல்வியாளர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, தமிழ்நாடு முழுவதுமுள்ள மாணவர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்தார்கள். இன்றைக்கு நீட் தேர்வினால் கிராமப்புற மாணவர்களுடைய மருத்துவக் கல்வி பாதிக்கப்படுகிறது.

அதேபோல, பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள மாணவர்களுடைய மருத்துவக் கல்வி என்பது, கேள்விக்குறியாக அமைகிறது என்பதை அந்தக் குழு பரிந்துரைந்துள்ளது. ஆகவே, சமூக நீதியை நிலைநாட்டும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13–9–2021 அன்று சட்டமன்றத்திலே சட்டமுன்வடிவை நிறைவேற்றி, அதை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் மூலமாக அனுப்பியதை, மாநில ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்காமல், வேண்டுமென்றே காலம் தாழ்த்தி, ஐந்து மாத காலம் கழித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு 1–2–2022 அன்று திருப்பி அனுப்பியிருக்கிறார். இந்திய அரசமைப்புச் சட்டம், உறுப்புப் பிரிவு 200–ல், மாநில ஆளுநருக்கு சட்டமன்றம் மற்றும் அமைச்சரவை முடிவுகளை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கின்ற அதிகாரம் இருக்கிறதே தவிர அதன்மீது எந்தவித கருத்தும் கூறுகின்ற அதிகாரம் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

அதேபோல, இன்றைக்கு தமிழகத்தினுடைய சட்டமன்றத் தீர்மானத்திற்கும், 8 கோடி தமிழ் மக்களுடைய உணர்வுகளுக்கும், கூட்டாட்சித் தத்துவத்திற்கும், அரசமைப்புச் சட்டத்திற்கும் எதிராக, ஆளுநருடைய செயல்பாடு என்பது இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு கல்வி என்பது பொதுப் பட்டியலில் இருக்கிறது. அதாவது மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமல் ஒன்றிய அரசு இன்றைக்கு நீட் தேர்வைத் திணித்திருப்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது. தமிழ்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகள், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்குகின்ற உறுப்புக் கல்லூரிகளில் இதுவரை +2 மதிப்பெண் அடிப்படையில்தான் தமிழ்நாட்டிலே மாணவர் சேர்க்கை என்பது நடைபெற்றுக் கொண்டிருந்தது.

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2022 பிப்ரவரி 8

அந்த அடிப்படையிலே சட்டம் இயற்றி, இன்றைக்கு தமிழ்நாட்டிலே டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரிகளாகச் செயல்படுகின்ற அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் தமிழகத்திற்கு 85 சதவிகிதமும், அதேபோல அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு 15 சதவீகிதமும் ஒதுக்கீடு பெற வேண்டும். அதேபோல இன்றைக்கு தமிழ்நாடு இந்தியாவிலேயே அதிக மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலமாகத் திகழ்கிறது. அதேபோல சிறந்த மருத்துவர்களைக் கொண்ட மாநிலமாகவும் தமிழகம் திகழ்கிறது. அவர்கள் நீட் தேர்வு எழுதவில்லை. +2 தேர்வின் அடிப்படையில்தான் மருத்துவக் கல்வியை முடித்து, இன்றைக்கு சிறந்த மருத்துவர்களாக மருத்துவ சேவை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பிலே மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

முற்பகல் 11–15

அதேபோல, இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய அளவிலே சமூக நீதியை நிலைநாட்டிட, சமூக நீதிப் பேரவையை உருவாக்கியிருக்கிறார். அனைத்து அரசியல் கட்சிகளும் மாநில முதல்வர்களும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அதேபோல், தமிழ்நாட்டில் சட்டமன்றத்தில் இருக்கின்ற கட்சிகள் அல்லாமல், வெளியில் இருக்கிற தமிழ் அமைப்புகளையும், மாணவர் அமைப்புகளையும் ஒன்றிணைத்து இந்தச் சமூக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். மருத்துவப் படிப்பில் P.G–க்கு, OBC பிரிவிற்கு சட்ட ரீதியாகப் போராடி, உச்ச நீதிமன்றம் வரை சென்று 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு இந்தியாவிற்கே சமூக நீதிக்கு வழிக்காட்டியாகத் திகழ்கிறார். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமூக நீதியை நிலைநாட்டிட எடுக்கின்ற அத்தனை நடவடிக்கைகளுக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், ஒட்டுமொத்த தமிழக மக்களும் தங்களோடு கைகோர்த்து நிற்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

2022 பிப்ரவரி 8]

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று நமது தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை 5 மாத காலங்களுக்கு கிடப்பில் போட்டு, அதை மீண்டும் நமக்கே திருப்பியனுப்பியுள்ள மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் செயலானது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் உணர்வினைக் காயப்படுத்துகிற செயலாகும்; தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள மாபெரும் துரோகமாகும். அதுமட்டுமல்ல, அரசியல் சாசன வழிகாட்டு நெறிமுறைகளை அப்பட்டமாக மீறி எடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு ஆளுநரின் தன்னிச்சையான எதேச்சதிகாரமான நடவடிக்கையாகும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பொதுப் பட்டியலில் உள்ள ஒரு பொருள் குறித்து மாநிலச் சட்டமன்றம் ஒரு மசோதாவை நிறைவேற்றினால், அதனை அந்த மாநில ஆளுநர் ஒன்றிய அரசுக்குத்தான் அனுப்ப வேண்டுமேதவிர, அதன்மீது தனது கருத்தை வெளிப்படையாகக் கூறுவதோ அல்லது அந்த மசோதாவை திருப்பியனுப்புவதோ கூடாது. அப்படி திருப்பியனுப்பியுள்ள மாண்புமிகு ஆளுநர் அவர்களின் செயல் அரசியல் சாசனத்திற்கு முற்றிலும் முரணானது; முற்றிலும் விரோதமானது. நீட் தேர்வு குறித்து, நமது அரசால் அமைக்கப்பட்ட நீதியரசர் ஏ.கே. ராஜன் குழுவின் பரிந்துரை, தமிழக மக்களின் உணர்வுகளை உள்ளங்கை நெல்லிக்கனியாய் எடுத்துக்காட்டுகிறது. இந்தக் குழு தமிழக மாணவர்களின் கருத்தைக் கேட்டது; கல்வியாளர்களின் கருத்தைக் கேட்டது; பெற்றோர்களின் கருத்தைக் கேட்டது. அனைத்துத் தரப்பு மக்களின் கருத்துகளைக் கேட்டது. இதற்கு பின்னர்தான் நீட் தேர்வு தமிழகத்தில் ஒரு பெரும் சமூக தாக்கத்தையும் மாணவர்களிடையே ஓர் உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்தும் எனவும், இத்தகைய தேர்வு முறை பெரும்பகுதி மாணவர்களின் மருத்துவக் கல்வியைப் பறித்து எட்டாக்கனியாக மாற்றும் என்றும் தனது கருத்தை உறுதியாகக் கூறியது. எனவேதான், நீதியரசர் ஏ.கே. ராஜன் குழு, நீட் தேர்வு தமிழகத்திற்கு வேண்டாமெனவும், தமிழகத்திற்கு விலக்களிக்கப்பட வேண்டுமெனவும் பரிந்துரை செய்திருக்கிறது. எனவே, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் நடவடிக்கை தமிழக மக்களின் உணர்வுகளுக்கும், மாணவர்களின் உணர்வுகளுக்கும் கூட்டாட்சி நெறிமுறைகளுக்கும் எதிரானது என்பதை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

[திரு. வி.பி. நாகைமாலி] [2022 பிப்ரவரி 8

மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் நடவடிக்கை ஒருதலைபட்சமானது என்பதை இம்மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். 8 கோடி மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கிறோம். மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் இயற்றிய சட்டத்தை நமக்கே திருப்பியனுப்பியதன்மூலம் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கியுள்ளார். தமிழகச் சட்டமன்றப் பேரவையின் மாண்பை அவமதித்துள்ளார். நீட் தேர்விற்கெதிரான இம்மாமன்றத்தின் குரலை யாரும் நிறுத்திவிட முடியாது என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சமூக நீதிக் கோட்பாட்டின் விளைநிலம் நம் தமிழ் மண். இந்த மண்ணிலிருந்துகொண்டு, சமூக நீதிக் கோட்பாட்டிற்கெதிராகச் செயல்படும் யாரையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். எனவே, தமிழக மக்கள் விரும்பாத நீட் தேர்வுக்கு எதிராக நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கரம் கோர்த்து உறுதுணையாக இருக்கும் என இந்த மாமன்றத்தில் நான் உறுதியளிக்கிறேன்.

முற்பகல் 11–20

மேலும், அரசியல் சாசனத்திற்கு விரோதமாகவும், சமூக நீதிக்கு எதிராகவும், தன்னிச்சையாகவும், எதேச்சதிகாரமாகவும் செயல்பட்டுவரும் தமிழக ஆளுநர் அவர்களை உடனடியாக ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டுமெனவும் நான் வலியுறுத்துகிறேன். இதுகுறித்து, இம்மாமன்றத்தில் ஒரு தீர்மானம் இயற்ற வேண்டுமெனவும் நான் கேட்டுக்கொள்கிறேன். 'நீட் தேர்வு தமிழகத்திற்கு வேண்டாம்' என்று நம்முடைய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்த அந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் உளப்பூர்வமாக ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. **S.S.** பாலாஜி அவர்கள்.

***திரு. S.S. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021 தேர்தலில் வாக்களித்த 82.48 சதவிகித தமிழக மக்களுக்கு

2022 பிப்ரவரி 8] [திரு. S.S. பாலாஜி]

இல்லாத அக்கறை; வாக்களித்த 3,81,31,917 பேருக்கு இல்லாத அக்கறை; மக்களெல்லாம் ஒன்றுகூடி, தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய 230 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாத அக்கறை;. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *234 சட்டமன்ற உறுப்பினர்கள். . .*

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கவில்லை, ஐயா. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்கின்ற சமூக நீதிக் கோட்பாட்டைத் தந்த இயக்கத்தின் வழித்தோன்றலின் தலைமை; இட ஒதுக்கீட்டிற்காக அரசமைப்புச் சட்டத்தின் முதல் சட்டத் திருத்தத்தைத் தந்த வம்சத்தின் தலைமை; அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம், மகளிருக்கும் சொத்தில் சம உரிமை என்கின்ற சமூக நீதிச் சட்டங்களை இந்த மாமன்றத்தில் நிறைவேற்றித் தந்த முத்தமிழறிஞர் கலைஞரின் கருத்தியல் வாரிசுக்கு இல்லாத அக்கறை; அடேயப்பா, தமிழ்நாட்டுக்கு வந்த சில மாதங்களிலேயே சிலருக்கு வருகிறது, தமிழக மக்களின்மீது அக்கறை.

என் சிறு வயதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசிய உவமை ஒன்றைக் கேட்டிருக்கிறேன். பாம்பின் நிழலெது, மரத்தின் நிழலெது என்று தெரியாமல் ஏமாந்த தவளையின் கதை ஒன்றைச் சொல்வார். இன்றைக்கு ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்குத் தொடர்ந்து எதிராகச் செயல்படக்கூடியவர்கள் யார் என்பதும், மண்டல் கமிஷனைத் தடை செய்வதற்காக குறுக்கே இரதத்தை ஓட்டியவர்கள் யார் என்பதும், அது பாம்பின் நிழல் என்பதும், தொடர்ந்து ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடியும், வாதாடியும், இன்றைக்குக்கூட, தமிழகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஆணையத்தை அமைத்து, ஒடுக்கப்பட்ட மாணவர்கள் முதுநிலைப் படிப்பு படிப்பதற்கென அவர்களுடைய வருமான வரம்பை உயர்த்தி, அவர்களுக்காகப் போராடக்கூடிய மரத்தின் நிழல் எது என்பதும் தெரியாத தவளையல்ல தமிழ் சமூகம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மருத்துவப் படிப்பில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெறுவதற்கான போராட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் முன்னெடுத்தபோது, இந்தப் போராட்டத்தில் வெற்றி கிடைக்குமா, இவரால் இதைச்

[திரு. S.S. பாலாஜி] [2022 பிப்ரவரி 8

சாதிக்க முடியுமா என்றெல்லாம் இந்திய தேசத்திலிருக்கக்கூடிய சமூக நீதி சிந்தனையாளர்களும், சமூக நீதிக்காகப் போராடுபவர்களும் உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். ஆனால், இன்றைக்கு, அதிலே அவர் வெற்றி கண்டு, இந்தியா முழுமைக்குமான பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தபிறகு, இன்றைக்கு இந்திய தேசத்திலே இருக்கக்கூடிய, சமூக நீதி சிந்தனையாளர்கள் அனைவரும், வாழ்த்துகின்றனர்; பாராட்டுகின்றனர். "ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் மீட்பர் இவர்" என்பதை இன்றைக்கு உறுதி செய்திருக்கின்றனர். இன்றைக்கு அவர் முன்னெடுத்திருக்கக்கூடிய நீட் தேர்வுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியும், தோழமைக் கட்சிகளும் மட்டுமின்றி, நாடு முழுமையிலுமுள்ள அத்தகைய சக்திகள் இன்றைக்கு அவர் பின்னால் அணிவகுத்து நிற்கின்றன. அடிப்படையில், நீட் தேர்வு மட்டுமே வேண்டாம் என்பதல்ல நம்முடைய நோக்கம். நுழைவுத் தேர்வு என்பதே கூடாது என்பதுதான் நம்முடைய நிலைப்பாடு. அதனால்தான், இதே மாமன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நுழைவுத் தேர்வு இரத்து சட்டத்தை நிறைவேற்றிக் காட்டினார்கள்.

நுழைவுத் தேர்வு, Entrance test என்று அதைச் சொன்னாலும், அது ஒரு போட்டித் தேர்வு. ஒரு competitive examination. Competitive Examination என்பது ஒரே நிலையில், பாடங்களைப் படித்து, பயிற்சியைப் பெற்றவர்களிடத்தே, அவர்களுடைய திறனில் யார் மேம்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சோதிக்கக்கூடிய ஒரு தேர்வு. ஆனால், பெரும் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலையிலுள்ள மாணவர்களுக்கு, அதுவும் பல தலைமுறைகளாக கல்வி மறுக்கப்பட்ட மாணவர்களுக்கு, முதல் தலைமுறையாக உயர் கல்வி நுழைவு வாயிலை எட்டிப்பிடிக்கும் மாணவர்களுக்கு, இத்தகைய தேர்வு நடத்துவது எவ்வகையிலும் நீதியல்ல.

முற்பகல் 11–25

அமெரிக்காவிலுள்ள சிகாகோ பல்கலைக்கழகத்தில் Elaine M. Allensworth and Kallie Clark ஆகியோர் ஓர் ஆய்வைச் செய்திருக்கிறார்கள். அந்த ஆய்வின் முடிவில், சமூக, பொருளாதார, வருவாய் ஆகிய ஏற்றத்தாழ்வுகளால் பள்ளிக்கூட மதிப்பெண்களில் அது ஏற்படுத்தும் தாக்கம் குறைவாக இருக்கிறது என்பதையும், அதே நேரத்தில், நுழைவுத் தேர்வு போன்ற போட்டித் தேர்வுகளில் அத்தகைய ஏற்றத்தாழ்வுகள் மிகப் பெரியளவிலே உள்ளன

2022 பிப்ரவரி 8] [திரு. S.S. பாலாஜி]

என்பதையும் அந்த ஆய்வு தெரிவித்திருக்கிறது. NEET தேர்வு என்பது மாநில அரசு பாடத்திட்ட மாணவர்களுக்கு பெரும் சுமையாகும். இத்தேர்வுகள் CBSE பாடத்திட்டத்தின் அடிப்படையிலும், அதே கேள்வி முறையிலும், MCQ என்று சொல்லக்கூடிய Multiple choice questions முறையிலும் நடத்தப்படுவதாக இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், இந்தத் தேர்வு, தமிழிலும் நடைபெறுகிறது என்று சொன்னாலும்கூட, தமிழ்வழியில் படிக்கக்கூடிய மாணவர்களின் சேர்க்கை, கிட்டத்தட்ட 90 சதவிகிதம் குறைந்திருக்கிறது என்பதற்கான சான்றுகளும் இருக்கின்றன. CBSE பாடத்திட்டப் பள்ளிகளில், தமிழ்வழியில் போதிக்கும் ஆசிரியர்களே இல்லை என்கின்றபோது, CBSE பாடத்திட்டத்தில் நடைபெறுகிற தேர்வை தமிழ்வழியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு எப்படி பயிற்றுவிக்க முடியும் என்கின்ற கேள்வியையும் இந்தச் சபையில் நான் முன்வைக்கிறேன். மருத்துவம் படிப்பதற்கு வேதியியல், இயற்பியல், விலங்கியல் மற்றும் தாவரவியல் ஆகிய 4 பாடப் பிரிவுகளிலும் போதுமான பாட அறிவு வேண்டும் என்பது மிக முக்கியம். ஆனால், NEET தேர்வு முறையில் இந்த 4 பாடப் பிரிவுகளில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் ஒரு கேள்விக்குக் கூட பதில் அளிக்காமல் அல்லது ஒரு கேள்விக்குக் கூட சரியான பதில் அளிக்காமல், Negative marks என்று சொல்லக்கூடிய அளவிற்கு minus marks பெற்றவர்கள் கூட இன்றைக்கு மருத்துவம் பயின்றுகொண்டிருக்கிறார்கள் என்பது இன்றைக்கு சான்றுகளோடு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதிக மதிப்பெண் எடுத்தும், பல தகுதி வாய்ந்த மாணவர்கள் ஒன்றிய அரசின் DGHS–Director General of Health Services நடத்தக்கூடிய கலந்தாய்வில் பெருந்தொகை, கட்டணம் செலுத்த முடியாததால், அவர்களது இடத்தில் குறைவான மதிப்பெண் பெற்ற மாணவர்கள், பெருந்தொகை கட்டணம் செலுத்தி சேருகின்றனர். எந்த அடிப்படையிலும், எந்தக் கோணத்தில் அணுகினாலும், NEET என்பது சமூக நீதிக்கு மட்டும் எதிரானதல்ல, அது ஒட்டுமொத்தமான இயற்கை நீதிக்கே எதிரானது. It is not just against Social justice, it is totally against the principles of Natural justice என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். "நெருக்கடிகள் சூழ்ந்தபோதும், கொள்கை நெறிப்படல் வாழ்தல் வீரம்" என்கின்ற எங்கள் தலைவர் எழுச்சித் தமிழர் அவர்களின் முழக்கத்தை மெய்ப்பிக்கும் முழு வடிவாய், "எதனையும் எதிர்கொள்ள இரு விழிப்பாய்! இமயம் போல் தடைவரினும் எகிறிப்பாய்"

[திரு. S.S. பாலாஜி] [*2022 பிப்ரவரி 8*

என வாகை சூடும் வியூகங்களை அமைத்திடும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தூய சிந்தனை, துணிவான முயற்சிகளைக் குறை கூறுபவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புவது,

"சிரம் காட்டி எமை ஏற்காமல் சிலர்
ஓட்டைகளைக் காட்டுகின்றார்–நாத
சுரம் காட்டும் ஓட்டையெலாம்
நல்லிசைக்கே என்றிடுவேன்"

என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதைத்தான், NEET இங்கே நீடித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு நொடியும் அதிலிருந்து மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதால், அதற்காக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர், எழுச்சித் தமிழர் அவர்களின் முன்மொழிவுகளை இந்த அவையில் பதிவு செய்கிறேன்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, மாவட்டத்திற்கு சில பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை NEET சிறப்பு மையங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நாம் NEET விலக்கை அடையும் காலம் வரை, NEET பயிற்சி மையங்களுக்கான செயல்பாடுகள் மற்றும் கட்டணங்களை வரைமுறைப்படுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய நீண்ட நாள் கோரிக்கையான அரசமைப்புச் சட்டம், உறுப்பு 200–ல் திருத்தம் கொண்டுவர வேண்டும். அதேபோன்று அரசமைப்புச் சட்டம், உறுப்பு 254, பிரிவு 2–க்கும் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, நடைபெற்ற முதல் மாநாட்டில், பஞ்சாப் மாநிலத்தின் அன்றைய முதலமைச்சர் குர்னம் சிங் அவர்கள் தலைமையில் நடைபெற்ற முதல் மாநாட்டில் ஐம்பெரும் முழக்கங்களை அறிவித்திருந்தார்கள். அதிலே முக்கியமானது "மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்பதாகும். அதேபோன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், ஐம்பெரும்

2022 பிப்ரவரி 8] [திரு. S.S. பாலாஜி]

முழக்கங்களைச் சொல்லியிருக்கிறார். அவற்றில் "அதிகாரக் குவியலை அடித்து நொறுக்குவோம்" என்று கூறியிருக்கிறார். அந்தவகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்படி மத்திய, மாநில அரசு உறவுகளை ஆராய்வதற்காக ராஜமன்னார் கமிஷனைத் தோற்றுவித்தாரோ, அமைத்தாரோ, அதேபோன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அத்தகைய ஓர் ஆணையத்தை அமைக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். "When the going gets tough, the tough gets going" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். சூழல்கள் கடினமாகும்போது, கடினத் தன்மை கொண்ட உறுதியானவர்களால் மட்டுமே அதை எதிர்கொண்டு முன்செல்ல முடியும். இதுவரை வரலாறு காணாத ஒரு Tough leader to handle the tough situations என்கின்ற அளவில், நம்முடைய தலைவராக மாண்புமிகு முதலமைச்சராக இன்றைக்கு அண்ணன் தளபதி அவர்கள் வீற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதிக்கான கூட்டமைப்பை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறார். அதை விரிவுபடுத்தி, மாநில சுயாட்சிக்கான ஒரு கூட்டமைப்பாகவும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் ஒரு கோரிக்கையாக முன்வைக்கிறேன்.

முற்பகல் 11–30

'முடியுமா நம்மால்' என்பது தோல்விக்கு முன்வரும் தயக்கம், 'முடித்தே தீருவோம்' என்பது வெற்றிக்கான தொடக்கம் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மொழிக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் NEET விலக்கைப் பெற்றே தீருவார் எனச் சொல்லிக்கொள்கிறேன். வீடுகளிலும், வீட்டிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளிலும் சமூக நீதி பேசி வந்த என் போன்றோரை சட்டமன்றத்திற்கு அழைத்து வந்து, எங்கள் குரலையும் இங்கே ஒலிக்கச் செய்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் இந்தச் சட்டமுன்வடிவை மனமார வரவேற்று, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.

[*2022 பிப்ரவரி 8*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்கள் ஏற்கெனவே, இந்த நீட் தேர்வு விலக்கு சட்ட மசோதா சம்பந்தமாக கடந்த கூட்டத்தொடரில் பேசினார். அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இன்று சட்டமன்றத்திற்கு வர முடியவில்லை. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நான் புதியவன். ஆனால், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் அய்யா அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய இளைஞரணித் தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர், எங்களுக்கு நடத்தும் பாடங்கள் வாயிலாக சட்டமன்றப் பேரவையின் வரலாற்றை நான் நன்கு அறிந்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவரையில், தமிழக சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதாவை அண்மைக்காலத்தில் எந்த ஆளுநரும் திருப்பி அனுப்பியதாக வரலாறு இல்லை. தமிழ்நாட்டின் சமூக நீதி வரலாற்றில் மிகவும் முக்கியமானது, 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு அங்கீகாரத்தையும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பையும் பெற்றது. அதற்கான மசோதா 1993 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதி தமிழக சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு, 31 ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்த மருத்துவம் மற்றும் பொறியியல் தேர்வுகளுக்கான நுழைவுத் தேர்வை இரத்து செய்வதற்கான சட்ட மசோதா கடந்த 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் நாள் தமிழக சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுப் போட்டியை அனுமதிப்பதற்கான சட்ட மசோதா 2017 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, உடனடியாக நிறைவேற்றப்பட்டது. இவை அனைத்துமே பொதுப் பட்டியலில் உள்ள துறைகள் தொடர்பானவை. ஆனால், எந்த ஆளுநரும் சட்ட மசோதாக்களைத் திருப்பி அனுப்பவில்லை. அதுமட்டுமின்றி, இந்தச் சட்ட மசோதாக்கள் அனைத்தும் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசின் பரிந்துரையுடன் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டன. இவை அனைத்தையும் கடந்து, 69 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கான தமிழக அரசின் சட்டத்திற்கு அரசமைப்புச் சட்டத்தின்கீழ் பாதுகாப்பினைப் பெறுவதற்காக மத்திய அரசு 76–வது அரசமைப்பு சட்டத் திருத்த மசோதாவை உருவாக்கி,

2022 பிப்ரவரி 8] [திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்]

1994ஆம் ஆண்டு, ஜூலை 23 ஆம் தேதி, நாடாளுமன்ற மக்களவையிலும் அதன் பின்னர் மாநிலங்களவையிலும் அது தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்ட மசோதாக்கள் மாண்புமிகு ஆளுநர் அவர்களாலும், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களாலும் எவ்வளவு மாண்புடன் அப்போது கையாளப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக இந்த உதாரணங்களைக் கூறினேன்.

அவ்வளவு ஏன், தமிழ்நாடு நீட் தேர்விலிருந்து விலக்குப் பெறுவதற்காக இரு சட்ட மசோதாக்கள் கடந்த 2017 ஆம் ஆண்டில் ஜனவரி 31 ஆம் தேதி அப்போதைய ஆட்சியில் நிறைவேற்றப்பட்டன. அப்போதும்கூட அச்சட்ட மசோதாக்களுக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளித்து, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தார்கள். பின்னர் அந்தச் சட்ட மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்க மறுத்து, மத்திய அரசு திருப்பி அனுப்பி வைத்தது. அதன் காரணமாகத்தான் கடந்த வருடம் செப்டம்பர் 13 ஆம் தேதி, புதிய நீட் தேர்வு விலக்கு சட்ட மசோதாவை சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டது.

தமிழ்நாட்டு மக்கள் அறிய விரும்புவது எல்லாம், 2017 ஆம் ஆண்டு அந்த சட்ட மசோதாவிற்கு ஒப்புதல் அளித்த ஆளுநர் மாளிகை இப்போது திருப்பி அனுப்பியது ஏன்? அதில் இல்லாத குறை இதில் என்ன இருக்கிறது? நீட் தேர்வு விலக்கு சட்ட மசோதாவைத் திருப்பி அனுப்பியதற்காக ஆளுநர் மாளிகை கூறியுள்ள காரணங்கள் அனைத்துமே எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகும்.

பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரை, நீட் தேர்வு தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, இந்தியா முழுவதற்கும் இரத்து செய்யப்பட வேண்டும் என்பதாகும். நீட் தேர்வு சமூக நீதியைச் சூறையாடுகின்றதே தவிர, எந்தவகையிலும் சமூக நீதியைப் பாதுகாக்கவில்லை. இதற்கு ஏராளமான ஆதாரங்களை கடந்த 5 ஆண்டுகளில் மருத்துவர் அய்யா அவர்களும், மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களும் பட்டியலிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். மருத்துவப் படிப்பிற்கு நீட் தேர்வை அறிமுகம் செய்ததற்காக மத்திய அரசால் கூறப்பட்ட இரண்டு முக்கிய காரணங்கள் என்னவென்றால், நீட் தேர்வு வந்தால் மருத்துவக் கல்வியின் தரம் உயரும், மருத்துவக் கல்வி வணிகமாகாது, தடுக்கப்படும் என்பதுதான். ஆனால், அந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.

[திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்] [2022 பிப்ரவரி 8

பஞ்சாப் மாநிலத்தில் ஒரு மாணவர் இயற்பியலில் பூஜ்யம் மதிப்பெண், வேதியியலில் 15 மதிப்பெண்கள், உயிரியலில் 85 மதிப்பெண்கள் என 100 மதிப்பெண்களுடன் மருத்துவ மாணவராகியிருக்கிறார். அதாவது நீட் தேர்வில் 720 மதிப்பெண்களுக்கு 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். வெறும் 13.88 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றால் மருத்துவப் படிப்பில் சேர முடிகிறது. 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் இந்த மதிப்பெண் பெற்றால் தேர்ச்சி பெற முடியாது. மற்றொருபுறம் 12 ஆம் வகுப்பில் 1,200 மதிப்பெண்களுக்கு 1,100–க்கும் கூடுதலான மதிப்பெண்கள் பெற்றவர்கள்கூட மருத்துவப் படிப்பில் சேர முடியவில்லை. நீட் தேர்வில் 300–க்கும் கூடுதலான மதிப்பெண்கள் பெற்றவர்களால்கூட மருத்துவப் படிப்பில் சேர முடியவில்லை. இதன்மூலம் தெரியவருவது மருத்துவக் கல்வியில் சேர்வதைத் தீர்மானிப்பது தகுதி அல்ல, பணம் என்பதுதான். இதன்மூலம் நீட் தேர்வு கொண்டுவரப்பட்டதற்கு கூறப்பட்ட இரு காரணங்களும் உண்மைக்கு மாறாகி விட்டன. அதனால், நீட் தேர்விலிருந்து விலக்குக் கோரி தமிழக சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பெறுவது மிகவும் பொருத்தமானது, நியாயமானது. இந்தச் சட்ட மசோதாவிற்கு பாட்டாளி மக்கள் கட்சி முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறது. ஆனால், தமிழக சட்டமன்றப் பேரவையில் இப்போது நிறைவேற்றப்படும் நீட் விலக்கு சட்ட மசோதாவிற்கு தமிழக ஆளுநர் அவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக ஒப்புதல் தர வேண்டும்.

முற்பகல் 11–35

தமிழ்நாட்டில் 2021–2022 ஆம் ஆண்டிற்கான மருத்துவ மாணவர் சேர்க்கை இப்போதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில், அடுத்த ஆண்டிற்கான நீட் தேர்வு இன்னும் சில வாரங்களில் அறிவிக்கப்பட்டுவிடும். அதற்கு முன்பாக, நீட் தேர்விலிருந்து விலக்கு பெற்றுத் தர வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழக அரசிற்கு இருக்கிறது. இன்று நிறைவேற்றப்படும் இந்த மசோதாவிற்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கண்டிப்பாக ஒப்புதலை அளித்துத்தான் ஆக வேண்டும். அதற்குப் பிறகு, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலை விரைவாகப் பெறுவதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்கான செயல் திட்டத்தை

2022 பிப்ரவரி 8] [திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்]

தமிழக அரசு வகுக்க வேண்டும். நீட் விலக்குச் சட்டத்திற்கு மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் கிடைத்த பிறகு, அடுத்த சில நாட்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழு டெல்லிக்குச் சென்று, மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து, நீட் விலக்கு சட்டத்திற்கு விரைவாக ஒப்புதல் அளிக்கும்படியும் வலியுறுத்த வேண்டும். நீட் விலக்குச் சட்டத்திற்கு, மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கான நடவடிக்கையை மத்திய உள் துறை அமைச்சகம், சுகாதாரத் துறை அமைச்சகம், சட்ட அமைச்சகம், குடியரசுத் தலைவர் மாளிகை ஆகிய அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பதற்காக தமிழக அரசின் மூத்த அமைச்சர்கள், துறைச் செயலாளர்களைக் கொண்ட ஓர் ஒருங்கிணைப்புக் குழுவை, தமிழக முதல்வர் அவர்கள் அமைக்க வேண்டும். 2022–2023 ஆம் ஆண்டிற்கான மாணவர்களின் சேர்க்கை நீட் தேர்வின் மதிப்பெண்கள் அடிப்படையில் இல்லாமல், 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வின் அடிப்படையில் இருப்பதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். இந்த மசோதாவை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் முழுமையாக ஆதரித்து, வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13–9–2021 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமுன்வடிவை, மேதகு ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பியிருக்கிறார். தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்தெடுக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், இந்தச் சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பியது என்பதை, தமிழக மக்களை மிகவும் அவமானப்படுத்தியதாக காங்கிரஸ் பேரியக்கம் கருதுகிறது.

இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கப் பேரவை. இந்தியாவில் அரசமைப்புச் சட்டம், 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று இயற்றப்பட்டிருந்தாலும், நவம்பர் 25 ஆம் தேதியன்று ஒரு மிகப் பெரிய விவாதத்திற்கு உள்ளாக்கப்பட்டது. அப்போது, அங்கிருந்த அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் போன்றவர்கள் எல்லாம், இந்தச்

[திரு. கு. செல்வபெருந்தகை] [2022 பிப்ரவரி 8 சட்டத்தையெல்லாம் எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள் என்று புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களிடம் கேட்டபோது, 'நீதிமன்றத்திற்குப் பதில் சொல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்தச் சட்டங்கள் மூலமாக மக்களுக்கு பதில் சொல்கின்ற காலம் வரும்' என்று அவர் பதிவு செய்திருக்கின்றார். ஆகையால்தான் அவர் பல articles எழுதியிருந்தாலும், Article 200, Article 201–ஐப் பற்றி மிகவும் தெளிவாக மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய அதிகார வரம்பு என்னவென்று எழுதியிருக்கிறார்கள்.

இந்தியா முதன்முதலாக 1950 ஆம் ஆண்டு, ஜனவரி 26 ஆம் தேதி குடியரசானாலும், முதன்முதலாக சட்டத் திருத்தம் மேற்கொண்டது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில் மட்டும்தான். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அன்றிருந்த பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் ஆகியோரால் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பார்க்காமல், நாட்டு மக்களுக்கு எது நன்மையோ, அதற்கான சட்டத் திருத்தம் இந்தியாவிலேயே முதன்முதலில் இந்தப் பேரவையில் செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்துதான் முதல் குரல் சமூக நீதிக்காகப் புறப்பட்டது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களுக்கு, மாணவ, மாணவிகளுக்கு இன்று என்ன தேவை இருக்கிறது என்பதைப் பற்றி அறிந்து, அந்தத் தேவையை உணர்ந்து, கருணையுள்ளத்தோடு, தாயுள்ளத்தோடு தாயுமானவராக இந்தச் சட்டத்தை இயற்றி அனுப்பியிருக்கிறார். ஆனால், இந்தச் சட்டத்தைத் திருப்பி அனுப்பியிருக்கிற விதத்தை நாம் பார்க்க வேண்டும். அரசமைப்புச் சட்டம் இன்றும் செத்துப்போகவில்லை. அதனை சாகடிக்கவும் முடியாது. இதற்கு பல வரலாறுகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருடைய வரம்பு என்ன என்பது பற்றி அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் என்று உள்ளன. நாம் இன்று சட்டம் இயற்றியிருப்பது பொதுப் பட்டியல். ஆனால், இந்தப் பொதுப் பட்டியலை அங்கீகரிக்கின்ற அதிகாரம் மேதகு குடியரசுத் தலைவருக்கு மட்டும்தான் இருக்கிறது. மாநிலப் பட்டியலில் கையை வைக்கின்ற அதிகாரம் மேதகு ஆளுநர் அவர்களுக்கு இருக்கிறது. நாம் அனுப்பிய இந்தச் சட்டமன்றப் பேரவையின் சட்டமுன்வடிவை மேதகு ஆளுநர் அவர்கள் உடனடியாக மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு

2022 பிப்ரவரி 8] [திரு. கு. செல்வபெருந்தகை]

அனுப்பியிருக்க வேண்டும். இதைத்தான் Article *200* சொல்கின்றது. ஆனால், Article *201*–ல் உள்ள மேதகு குடியரசுத் தலைவருக்கு உண்டான அதிகாரத்தை, தான் எடுத்துக்கொண்டு, இதில் குறிப்பு எழுதியனுப்பியிருக்கின்றார். அந்தக் குறிப்பு தமிழக மக்களை மிகவும் வேதனைப்படுத்தியிருக்கிறது.

முற்பகல் 11–40

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், High Power Committee–க்கு Dr. Justice A.K. Rajan அவர்களை நியமித்திருக்கிறார். அவர் சிறந்த வழக்கறிஞர்; சட்டத் துறைச் செயலாளராக இருந்தவர்; நீதியரசராக இருந்தவர்; பல வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புகளைக் கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட நீதியரசர் ஏறக்குறைய *86,000* நபர்களைச் சந்தித்து, தரவுகளைத் திரட்டி, புள்ளிவிவரத்தோடு ஆய்வு செய்து, அதை அறிக்கையாகக் கொடுத்திருக்கிறார். தலைமைச் செயலாளர் அவர்கள் ஒரு கமிட்டியை அமைத்து, அந்த கமிட்டியில், இந்த அறிக்கையை ஆய்வு செய்து பரிந்துரை செய்திருக்கிறார். இந்தப் பரிந்துரையை ஏற்காமல் இப்படி திருப்பியனுப்பியது மிகவும் வேதனைக்குரிய செயலாகும்.

அவர் என்ன சொல்கின்றார்? Christian Medical College, Vellore Association Vs. Union of India என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்பைக் கோடிட்டுக் காட்டுகின்றார். அவர்கள் கேட்கும் விதம் வேறு; அவர்களுடைய வாதம் வேறு. 'எங்களுடைய கல்லூரி, கிறித்தவ மக்களுக்கான, சிறுபான்மையின மக்களுக்கான கல்லூரி. நாங்கள் பல பொது நல மருத்துவமனைகளை வைத்திருக்கின்றோம். இங்கே தாயுள்ளத்தோடு அணுகுகின்ற மருத்துவர்களை நாங்கள் சேர்க்க விரும்புகின்றோம். ஆகையால் நீட் எங்களுக்குப் பொருந்தாது. நாங்கள் ஒரு தேர்வு வைப்போம்' என்று சொல்கின்றார்கள். 'முடியாது, ஒப்புக்கொள்ள முடியாது' என்று அதை நீதிமன்றம் இரத்து செய்கிறது. அது வேறு, நாம் அனுப்பிய சட்டமுன்வடிவு வேறு. அதையும் இதையும் முடிச்சுப்போடுவது மிகப்பெரிய கவலைக்குரிய செயலாகும். அரசமைப்புச் சட்டத்தை இவர்கள் எப்படிப் பயன்படுத்துகின்றார்கள் என்று நினைத்துப் பார்த்தால் வேதனை அதிகரிக்கின்றது.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் இந்தக் குழுவை

[திரு. கு. செல்வபெருந்தகை] [2022 பிப்ரவரி 8 அமைத்தபோது, அரசியல் கட்சிப் பிரமுகர் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடருகின்றார். அந்த வழக்கில் இந்த Christian Medical College, Vellore Association வழக்கை ஒப்பிட்டுப் பேசுகின்றார். நீதிமன்றம் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறது. ஓர் அரசியல் கட்சித் தலைவர் சொன்னதை ஒப்பிட்டு, இதில் எப்படி சுட்டிக்காட்ட முடியும் என்ற ஐயமும் ஏற்படுகின்றது.

இரண்டாவது, நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் அறிக்கையில் கொடுத்திருப்பதெல்லாம் தமிழக மக்கள், தமிழக மாணவ மாணவியரின் நலன் கருதித்தான். இந்தத் தலைமுறையைக் காப்பாற்ற வேண்டும்; அடுத்த தலைமுறைக்கு வழிகாட்ட வேண்டுமென்றுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த கமிட்டியைத் தேர்ந்தெடுத்து, அமைத்திருக்கிறார்.

அவர் சொல்லியிருப்பது, Page 3, Para 5.6, Judgement quoted in CMC, Vellore Association case. Article 46, 47 of Indian Constitution–ஐப் பற்றி இதில் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் இன்றிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆகிய அனைவரும் Article 46–ல், இதுவரை என்னென்ன செய்திருக்கிறார்கள் என்றால், +2 வரை கல்விக் கட்டணம் கிடையாது, SC, ST, BC மாணவர்களுக்கு தங்கும் விடுதி வசதி, விலையில்லா கல்விப் பொருட்கள், 6 ஆம் வகுப்பிலிருந்து உதவித் தொகை, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை, இப்படி Article 46–ஐ இந்தியாவில் நடைமுறைப்படுத்துகின்ற ஒரே மாநிலம் நம்முடைய தமிழக மாநிலம்தான் என்பதை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று Article 47–ஐப் பற்றிச் சொல்கின்றார். Public Health and Nutrition. இன்றைக்கு இந்தியா மட்டுமல்ல, உலகமே போற்றுகின்ற வகையில், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள், இல்லம் தேடி மருத்துவம், கலைஞர் காப்பீட்டுத் திட்டம், 7 நாட்களும், 24 மணி நேரமும் தொடர்ந்து மருத்துவ சேவை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தற்போது துவக்கி வைக்கப்பட்டிருக்கின்ற மருத்துவப் பணிகள் போன்றவற்றையெல்லாம் நாம் நிறைவேற்றியிருக்கிறோம். எதற்காக, Article 46, 47–ஐ இவர் இங்கே சுட்டிக்காட்டுகின்றார் என்பது புரியவில்லை.

2022 பிப்ரவரி 8] [திரு. கு. செல்வபெருந்தகை]

மேதகு ஆளுநர் அவர்கள் நிறைய முதலமைச்சர்களைப் பார்த்திருக்கலாம். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அப்படிப்பட்ட முதலமைச்சர் இல்லை. சமூக நீதிக்காகக் குரல் கொடுக்கும் முதலமைச்சர். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். எங்களுடைய முதலமைச்சர், High Volt முதலமைச்சர். அவரை நெருங்கவே முடியாது; High Voltage ஆக இருக்கின்ற முதலமைச்சராகத்தான் இந்தியாவில் இருக்கும் முதலமைச்சர்கள் பார்க்கின்றார்கள். நீங்கள் உங்களுடைய வரம்பிற்குள் நிற்க வேண்டும். Article 201–ல் உள்ள மேதகு குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரத்தை நீங்கள் எப்படி எடுக்க முடியும்? இதுதான் எங்களுடைய மிகப் பெரிய கவலை.

முற்பகல் 11–45

இவர்களெல்லாம் இப்படி செய்வார்கள் என்றுதான், தந்தை பெரியார் அவர்கள் *16–3–1968* அன்று பேசும்போது சொல்கின்றார். *16–3–1968* அன்றைய தந்தை பெரியாரின் உரை. 'மதிப்பெண்களால் கெட்டிக்காரத்தனம், சோம்பேறித்தனம் கண்டுபிடிக்க முடியாது என்பது மாத்திரமல்ல, யோக்கியன், அயோக்கியன், அறிவாளி, மடையன் என்பதையும் கண்டுபிடிக்க முடியாது என்பதை கடுகளவு அறிவு உள்ளவனும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம் என்பதோடு, இது மாபெரும் அனுபவ முடிவு என்பதையும் வலியுறுத்திக் கூறுவேன்' என்று சொல்கின்றார். தகுதி, திறமை என்பதற்கு மேலும், மேலும் நிபந்தனைகளைச் சுமத்திக்கொண்டே இருக்க வேண்டியிருக்குமானால், தகுதி, திறமை என்பது யோக்கியமானதாக, நாணயமானதாக இருக்க முடியாது என்று சொல்கிறார். அன்றே, ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சொல்கிறபோது, 'இதையெல்லாம் படித்துப் பார்த்தால், இதில் என்ன இருக்கிறது; வெங்காயம் இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார். இந்த அறிக்கை என்ன சொல்ல வருகிறது? மாண்புமிகு ஆளுநர் அவர்கள் திருப்பியனுப்பியிருக்கிறார்களே, அதிலே ஏதேனும் சாரம் இருக்கிறதா? அரசமைப்புச் சட்டத்திற்குட்பட்டு இருக்கிறதா? தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோர்வையாகச் சொன்னதை நான் எண்ணிப் பார்க்கிறேன். தந்தை பெரியார் அவர்கள் சொன்னதை, அவருடைய வழித்தோன்றலாக இன்று நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்.

[திரு. கு. செல்வபெருந்தகை] [*2022 பிப்ரவரி 8*

அதோடுமட்டுமல்ல, Bombay Legislative Council–ல் *1927* ஆம் ஆண்டு ஜூலை, *27* அன்று பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள் ஒரு வரியில் சொல்கிறார்கள், 'கல்வித் தரத்தை உயர்த்துவது என்ற பெயரால் அவர்கள் தேர்வுகளை மிகக் கடுமையானதாக்குகின்றனர். இதன்மூலம் இதுகாறுமபல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே நுழைய வாய்ப்பில்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அந்த வளாகத்திற்கு வெளியே அறவே நிறுத்தப்பட்டுவிடுகின்றனர்.' இதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் சொன்னதையும், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் சொன்னதையும் அவர் இன்று நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இடைக்காலத்தில் மிகப் பெரிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். மருத்துவ உயர் கல்வி மாணவர் சேர்க்கையில் *27* சதவிகிதம் OBC reservation என்று *20–1–2022* அன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகளான Justice Chandrachud and Justice Bopanna ஆகியோர் அடங்கிய அமர்வு வழங்கிய தீர்ப்பில், மதிப்பெண் ஒன்றையே கொண்டு தகுதியை அளந்துவிட முடியாது. மருத்துவத் தொழிலில் சமூக மதிப்பீட்டைக் கொண்டே தகுதியைப் பற்றிப் புரிந்துகொள்ள இயலும் என்று சொல்லியிருக்கிறார்கள். Pradeep Jain வழக்கை இதில் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆகவே, தகுதி என்ற சொல்லுக்குப் புதிய கோட்பாட்டை உருவாக்க வேண்டுமென்பதற்கு மாறாக, அதிக மதிப்பெண் பெற்ற ஒருவர் தன் திறனைக் கொண்டு நல்ல காரியங்களைச் செயல்படுத்தவில்லையென்றால், அவர் அதிக மதிப்பெண் பெற்றார் என்ற காரணத்திற்காக அவரைத் தகுதியானவர் என்று அழைத்துவிட முடியாது. ஒருவர் செய்யும் செயலின் தன்மை மற்றும் பொதுச் சேவையில் அவரது அர்ப்பணிப்பு ஆகியவற்றைத் தகுதிக்கான அளவுகோலாகக் கொள்ள வேண்டும். இவற்றை போட்டித் தேர்வு மூலமாக மதிப்பிட்டுவிட முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். தந்தை பெரியார் சொல்லியிருக்கிறார்; புரட்சியாளர் அம்பேத்கர் சொல்லியிருக்கிறார்; இடையில் ஒரு மாதத்திற்கு முன்பு, உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைத்தானே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்திலுள்ள குழந்தைகளுக்காக, மாணவ, மாணவிகளுக்காக அர்ப்பணித்திருக்கிறார்கள். இது ஏன் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுக்குப் புரியவில்லை?

2022 பிப்ரவரி 8] [திரு. கு. செல்வபெருந்தகை]

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள்; Modern Dental College Vs. Union of India வழக்கில் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வில், 5 நீதியரசர்களும், ஒரு மாநிலத்திற்குண்டான அதிகாரத்தையும், வரம்பு மீறல்களைப் பற்றியும் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, நீதியரசர் பானுமதி அவர்கள் சொல்லும்போது, 'The State's right is not denuded' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாநிலத்தினுடைய அதிகாரம் கரைந்து போகவில்லை; அவர்கள் சட்டம் இயற்றுவதற்கு உரிமை இருக்கிறது; 'The State's right is not denuded' என்று சொல்லியிருக்கிறார்கள். அது 5 நீதியரசர்கள் சொன்ன தீர்ப்பு. இப்படி, பல தீர்ப்புகளைக் கோடிட்டுக் காட்டாமல், Christian Medical College வழக்கிற்கான தீர்ப்பைப் பற்றிக் கூறியிருப்பது மிகப் பெரிய வருத்தத்திற்குரிய செயலாகும்.

நீட் தேர்வு என்றால் என்ன? நாங்கள் +2 படிக்கும்போது தகுதித் தேர்வு வைத்திருந்தார்கள். Physics, Biology, Chemistry பாடங்களைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார். இந்தப் பாடங்களில் அப்போது 200 மதிப்பெண்கள் இருந்தன. 180 மதிப்பெண்களுக்குக் குறைவாகப் பெற்றவர்கள் மருத்துவப் படிப்பிற்கான இடங்களைத் தேர்வு செய்ய முடியாது. இதுதான் யதார்த்தம். கடந்த காலங்களில் நீட் தேர்வு வருவதற்கு முன்பாக இப்படித்தான் இருந்தது. ஆனால், நீட் தேர்வில் 720 மதிப்பெண்கள் வைத்திருக்கிறார்கள். நான் ஒன்று மட்டும் கேட்கிறேன். Physics, Biology, Chemistry பாடங்களைப் பற்றிச் சொல்கிறீர்களே! இந்தியா டுடே பத்திரிகையில் ஒரு article வந்திருக்கிறது. Physics–ல் zero மதிப்பெண் பெற்றவர், Chemistry–ல் zero மதிப்பெண் பெற்றவர், Biology–ல் zero மதிப்பெண் பெற்றவர், எப்படி நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று, MBBS படிப்பில் மருத்துவர் படிப்பிற்குத் தேர்வு பெற்றார்? அவர் எப்படித் தேர்வு பெற முடியும்? இதுதான் நீட் தேர்வில் உள்ள பிரச்சினை என்று டாக்டர் ஏ.கே. ராஜன் குழுவும் தெரிவித்துள்ளது. ஆதாரத்தோடு சொல்கிறோம். நாங்கள் நடத்திய தேர்வு சிறந்த தேர்வா? நீங்கள் கொண்டு வந்த நீட் தேர்வு சிறந்த தேர்வா? எந்தத் தேர்வு மக்களுக்கான தேர்வு?

புகழ் பெற்ற மருத்துவர்கள் பலர் தமிழகத்தில் இருக்கிறார்கள். டாக்டர் காமேஸ்வரன், டாக்டர் லலிதா காமேஸ்வரன், டாக்டர் மோகன் காமேஸ்வரன், டாக்டர் கே.ஆர். பழனிசாமி, டாக்டர் ரங்கபாஷ்யம் ஆகியோரெல்லாம் எந்த நீட் தேர்வை எழுதிவிட்டு

[திரு. கு. செல்வபெருந்தகை] [*2022 பிப்ரவரி 8 மருத்துவர்கள் ஆனார்கள்? இப்படிப்பட்ட புகழ்பெற்ற மருத்துவர்கள் இருக்கிறார்கள். எதற்காக இந்த நீட், நீட் என்ன செய்கிறது என்பதுதான் கேள்வி. ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் கோடியை* Byjus *போன்ற பல நிறுவனங்கள் ஈட்டிக்கொண்டிருக்கின்றன.* Udit Surya *போன்ற போலி மாணவர்களை உருவாக்குகிறது. கேள்வித்தாள்களை வெளியில் விற்பதற்கு ஒரு நிறுவனம் இருக்கிறது. இதுதான் நீட் தேர்வினால் ஏற்படக்கூடிய நிலை. இதனைக் கண்டுபிடித்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நீட் தேர்வை நடத்தவிட மாட்டேன், சமூக நீதிக்காகப் போராடுவோம் என்று குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

முற்பகல் 11–50

மாண்புமிகு முதல்வர் அவர்களே, தமிழகத்தில் நல் உள்ளம் கொண்டவர்கள் அனைவரும் உங்கள் பின்னால் அணிவகுத்து நிற்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் மட்டுமல்ல, இதனை இந்தியாவே இன்றைக்கு திரும்பிப் பார்த்துக்கொண்டிருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் உன்னதமான போராட்டத்தைக் கையில் எடுத்திருக்கிறீர்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பெருந்தலைவர் காமராஜர் எல்லாம் எப்படி வரலாற்றில் பதிவு செய்திருக்கிறார்களோ, வரலாற்றைப் படைத்திருக்கிறார்களோ, அதேபோன்று இந்த விஷயத்தில் நீங்களும் ஒரு வரலாற்றைப் பதிவு செய்வீர்கள் என்று நான் அடித்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ தீர்ப்புகள், எத்தனையோ வரலாறுகளைப் பார்த்த இந்தப் பேரவையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தச் சட்டமுன்வடிவை மீண்டும் மீண்டும் மீண்டும் காங்கிரஸ் பேரியக்கம் ஆதரிக்கிறது. தமிழகத்தினுடைய வரலாற்றை, தமிழர்களுடைய வீரத்தை, தமிழர்களுடைய கலை, கலாச்சாரத்தை எங்கள் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள் பாராட்டி, பாராளுமன்றத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஒருபோதும் தமிழகம் தொட்டதை விடாது; வெற்றி பெறும்; வெற்றி பெறும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்னால் நாங்கள் அணி வகுத்து நிற்கிறோம் என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

2022 பிப்ரவரி 8]

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே உரையாற்றக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது இந்த நீட் தேர்வை இரத்து செய்வதற்காக அல்லது விலக்குப் பெறுவதற்காக அரசியல் அழுத்தம் ஒருபுறம், சட்டப் போராட்டம் ஒருபுறம் என பன்முக நடவடிக்கைகளை, மிகக் கடுமையான பகீரத முயற்சிகளையெல்லாம் தமிழகத்திலே எடுத்துக் கொண்டிருந்தார்.

> "முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
> மொய்ம்புற வொன்றுடையாள்–இவள்
> செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்
> சிந்தனை ஒன்றுடையாள்"

என்று பாரதி சொல்லியிருக்கிறாரே, அதேபோல், ஒரே சிந்தனையிலே இன்றைக்கு இந்த அவையிலே பயணித்துக் கொண்டிருக்கின்ற நாம், மாணவர்களுடைய நலனுக்காக, கிராமப்புற மாணவர்களின் நலனுக்காக, அரசுப் பள்ளி மாணவர்களுடைய நலனுக்காக, பின்தங்கிய மாணவர்களின் நலனுக்காக, பெற்றோர்களின் நலனுக்காக, நாம் இன்றைக்கு எந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமுன்வடிவினை இரண்டாவது முறையாக நிறைவேற்றக் கூடியிருக்கின்றோமோ, அந்தப் பலனை 7.5 சதவிகிதம் என்ற இட ஒதுக்கீட்டின் மூலமாகக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யாருமே கேட்காத நேரத்திலே, யாருமே எதிர்பார்க்காத நேரத்திலே, எந்தக் கோரிக்கையும் இல்லாத நேரத்திலே, தன் சிந்தனையிலே உதித்த சீர்மிகு திட்டமாக, அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய சிந்தனையிலே உதித்த சீர்மிகு திட்டமாக 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டினைக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நடந்து முடிந்த Counselling–லேகூட, இளநீர் விற்பவருடைய மகனும், மிட்டாய்க் கடையிலே பணிபுரியக்கூடிய ஒரு சாதாரண விதவைப் பெண்ணுடைய மகளும், இன்னும் சொல்லப்போனால், குப்பனும், சுப்பனும், வயலில் ஏரோட்டிக் கொண்டிருக்கின்ற சாதாரண விவசாயக் குடிமகனுடைய மகனும், மகளும், மருத்துவர் ஆக வேண்டும் என்ற கனவை நிறைவேற்றக்கூடிய வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவைப் பெற்றுக் கொடுத்த மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார்

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2022 பிப்ரவரி 8 அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை, நன்மைகளை இந்த நாட்டு மக்களுக்கு அளிக்கின்ற எல்லா திட்டங்களுக்கும் தோளோடு தோளாக உறுதுணையாக இருந்து, ஆட்சியிலும், கட்சியிலும் எங்களை வழிநடத்திக்கொண்டிருக்கக்கூடிய, எனக்கு இந்த நல்வாய்ப்பினை வழங்கிய மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரிய எங்களுடைய கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், கழகத்தினுடைய கொறடா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முதன்முதலாக பல்வேறு கருத்துகளை அழகாக அடுக்கிக்கொண்டு வந்தார்கள். நான் அவற்றை உற்று நோக்கிக்கொண்டிருந்தேன். அண்ணன் அவர்கள் பேசுகின்றபொழுது, திரு. அனந்தகிருஷ்ணன் கமிஷன் அறிக்கையிலிருந்து தம்முடைய கருத்துகளைப் பதிய வைத்திருந்தார்கள். இந்த அவையில் பல்வேறு வரலாறுகளை நாங்கள் பல நேரங்களில் பதியவைத்திருக்கின்றோம். நாட்டு மக்களுக்கும் இந்த வரலாறுகள் தெரியும். நான் அதற்குள் அதிகமாகப் போக விரும்பவில்லை என்றாலும்கூட, முதன்முதலாக, நீட் தேர்வு என்ற விஷயத்தைத் தாண்டி, நுழைவுத் தேர்வு, entrance examination என்ற விஷயமே 1984–லிருந்துதான் வந்தது. அண்ணா பல்கலைக்கழகத்தில் 150+50 marks in Physics, Chemistry, Biology என்று ஒரு system இருந்தது. அந்த நிலையில்கூட, 2005–ல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, 2005–ல்தான் முதன்முதலாக நுழைவுத் தேர்வு என்ற concept–டே வேண்டாம். நுழைவுத் தேர்வே வேண்டாம்; (மேசையைத் தட்டும் ஒலி) Only based on Plus Two marks - +2 தேர்வின் அடிப்படையில்தான் மருத்துவ மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு சட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். . .

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பது, 2005–ல் அன்றைய முதல்வர் அவர்கள் நுழைவுத் தேர்வே வேண்டாமென்று சொன்னதாக இங்கே குறிப்பிட்டார்கள். அது எந்த வகையிலும் அடிப்படை ஆதாரமற்ற ஒன்று. 2006–ல்தான் மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலான ஒரு குழுவை அமைத்து, அதிலிருந்து கிடைக்கப் பெற்ற அறிக்கையை வைத்து நீதிமன்றங்களுக்குச் சென்று, அதன்மூலம் நுழைவுத் தேர்வு இரத்து என்கின்ற அந்த வாய்ப்பைப் பெற்றுத் தந்தார்கள். மீண்டும் ஏதாவது சொல்லும்போது, அதற்கு முன்னர் ஒரு வருடத்தைச் சொல்லி, அப்போது நாங்கள் நினைத்தோம் என்று சொன்னால்– நீங்கள் நினைத்திருக்கலாம்; ஆனால், செய்து முடித்தது, மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்றது.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன அதே குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்றோம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அதே அனந்தகிருஷ்ணன் குழுவைப் போட்டோம். 19–6–2005–ல் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகத்தில் அல்ல; அப்போது உயர் கல்வித் துறை அமைச்சகத்தில் G.O. எண் 184–ல் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த நுழைவுத் தேர்வு வேண்டாம் என்று சட்டம் போட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதாரம் இருக்கிறது; நீங்கள் verify செய்யுங்கள். Higher Education Department–ல் நுழைவுத் தேர்வு என்ற concept–டே வேண்டாம் என்று சொல்லி சட்டம் போட்டார்கள். அந்தச் சட்டத்தை எதிர்த்து பிரியதர்ஷினி என்ற ஒரு மாணவி வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றபோது, அந்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டது. அந்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டபோது ஆட்சி மாற்றம் வருகிறது. ஆட்சி மாற்றம் வந்து, உங்களுடைய ஆட்சி வருகிறது. அப்போதுதான், நீங்கள் அனந்தகிருஷ்ணன் கமிட்டியை அமைத்து, அதற்குப் பிறகு அதே சட்டத்தைத்தான் நீங்கள் ஜனாதிபதி அவர்கள் வரைக்கும்

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2022 பிப்ரவரி 8 அனுப்பி ஒப்புதல் பெற்றீர்கள் என்கின்ற கருத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதாரமில்லாமல் இந்தக் கருத்தை நான் சொல்லவில்லை. ஆதாரம் இருக்கிறது. G.O. No. 184. அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, ஓரிடத்தில் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984–ல் நுழைவுத் தேர்வு நுழைந்தது என்று அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். 1984–ல் யாருடைய ஆட்சி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தை நான் ஏன் சொல்கிறேன் என்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் புரட்சித் தலைவி அம்மா காலத்திலிருந்து இன்றைக்கு வரை தொடர்ந்து நீட் எதிர்ப்புக் கொள்கையில் நாங்கள் உறுதியாக இருந்துகொண்டிருக்கிறோம் என்ற கருத்தை பதிய வைப்பதற்காகத்தான் நான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இடைப்பட்ட காலங்களில், அரசியல் காரணங்களுக்காக ஏதோ அந்தக் கொள்கையிலிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நழுவுகிறதோ, விலகுகிறதோ என்ற கருத்து வெளியிலே பேசப்படுகின்ற காரணத்தினால்தான், எந்தச் சூழ்நிலையிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வளைந்து கொடுக்கக்கூடிய, நெளிந்து கொடுக்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) விட்டுக்கொடுக்கக்கூடிய, கொள்கையிலிருந்து சிறிதும் தடம் மாறுகின்ற, தடம் பிறழ்கின்ற இயக்கம் அல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக் கொண்ட, நீட் எதிர்ப்புக் கொள்கையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்திலும் உறுதியாக இருந்தது; சட்டப் போராட்டம்

2022 பிப்ரவரி 8] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

நடத்தினோம், அரசியல் அழுத்தம் கொடுத்தோம். இன்றைக்கும் அதே சட்டப் போராட்டம், அரசியல் அழுத்தம், ஏன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைத்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே, முதல் கூட்டத்திலே மரியாதைக்குரிய எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோருடைய ஒப்புதலோடு கலந்து கொண்டு, அரசு எடுக்கின்ற சட்டப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சட்டப்பூர்வமான ஆதரவை வழங்கும் என்பதை மனப்பூர்வமாக, உணர்வுப்பூர்வமாக நாங்கள் தெரிவித்தோம். அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்தே கிடையாது. ஆனால், வெளியிலே சில கருத்துகளைப் பேசுகின்றபோது, ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் யாருக்கோ அடிபணிந்துவிட்டது போன்ற கருத்துகள் வருகின்றபோதுதான், அதற்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், நீங்கள் எங்களை ஒப்பிட்டுப் பேசுகிறீர்கள். நாடாளுமன்றத்தில் பாரதப் பிரதமர் அவர்கள், இப்போது இருக்கின்ற இந்தச் சூழலில், MCI notification–ஐ abolish செய்து, NMC என்று சொல்லக்கூடிய ஒரு புதிய சட்ட மசோதாவைக் கொண்டு வந்தபோதுகூட, ஆணித்தரமாக அந்த NMC Bill–ஐ எதிர்த்து நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து, பதிய வைத்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அந்த NMC–ல் நீட் என்கிற ஒரு ஷரத்து இருக்கிறது. மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரவீந்திரநாத் அவர்கள்தான் அதிலே பேசியிருக்கிறார்கள்.

நண்பகல் 12–00

இன்னும் சொல்லப்போனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அன்றைக்குக் கொடுத்த அழுத்தத்தின் காரணமாகத்தான், அந்த மசோதா, பாராளுமன்றத்தின் Standing Committee–க்கு, நிலைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அதை இந்தியா முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை உருவாக்கியது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்தக் காலத்திலும், யாருக்காகவும் கொள்கைகளை விட்டுக் கொடுக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய எந்தத் திட்டத்தையும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கும். நம்முடைய மக்கள் நலனுக்கு,

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2022 பிப்ரவரி 8 நாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்த விஷயத்தையும் நெஞ்சுரத்தோடு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கும்" என்று அடிக்கடி சொல்வார்கள். அந்தக் கருத்தைப் பதிய வைப்பதற்குத்தான் அதைச் சொன்னேன்.

நான் மிகவும் உள்ளே சென்று விரிவாகப் பேசாமல், சுருக்கமாகப் பேச வேண்டும் என்று நினைத்தேன். மரியாதைக்குரிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசியபோது, Revision Petition, மறுசீராய்வு மனு போட்ட காரணத்தைச் சொன்னதாலும், கடைசியாகப் பேசிய மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் திரு. செல்வபெருந்தகை அவர்கள் பேசியபோது, கடைசியாக, மரியாதைக்குரிய திரு. ராகுல் காந்தி அவர்கள் கூறிய கருத்தைப் பதிவு செய்ததாலும் நான் ஒரு சில கருத்துகளைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறேன். பழைய வரலாறு, ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். யாருடைய மனதையும் நோகடிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் கிடையாது. 27–12–2010 அன்று MCI notification–ல்தான் முதன்முதலில் NEET என்ற வார்த்தையே வந்தது. இன்று சட்டமன்றம் கூடியிருக்கிறது; அனைத்து கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பேசுகிறோம். எதைப் பற்றி பேசுகிறோம்? NEET பற்றிப் பேசுகிறோம். NEET என்றால் என்ன? அது எப்படி வந்தது? அதன் நதிமூலம், ரிஷிமூலம் என்ன? NEET என்ற வார்த்தை யாருக்குமே தெரியாது. National Eligibility cum Entrance Test என்ற வார்த்தைகள் யாருக்குமே தெரியாதே? எனக்குத் தெரியுமா, உங்களுக்குத் தெரியுமா? யாருக்குமே தெரியாது. அந்த வார்த்தை ஏன் வந்தது? National Eligibility cum Entrance Test என்ற ஒரு system குறித்து முதன்முதலில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் 27–12–2010–ல் MCI notification–ஐப் போட்டது ஏன்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்த பிறகு, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

2022 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களுடைய கட்சித் தலைவரைப் பற்றி பேசியதால், அவர் பேச வாய்ப்புக் கேட்டார். அதனால், நான் வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடு)

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உண்மைக்குப் புறம்பான செய்தியை இந்த அவையிலே பதிய வைக்கிறார். இந்த மசோதா ஏகமனதாக நிறைவேற வேண்டும் என்பதற்காக நாங்கள் நாகரிகமாக அரசியலுக்குள் செல்லவில்லை. (குறுக்கீடு) நாங்கள் அரசியல் பேசவில்லை. (குறுக்கீடு)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. செல்வபெருந்தகை, உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட இந்த மசோதா, மாண்புமிகு ஆளுநர் அவர்களால் திருப்பியனுப்பப்பட்டுள்ளது. அதை மீண்டும் அனுப்புவதற்கான தீர்மானத்தை ஏகமனதாக, ஒருமனதாக நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையில்தான் தற்போது அவை அலுவல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கிடையே, வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசி, திசைதிருப்பி, ஒருமனதாக நிறைவேற்றப்பட வேண்டிய இந்தத் தீர்மானத்திற்கு, ஏதேனும் ஒரு சிறு கரும்புள்ளிகூட வந்துவிடக்கூடாது என்பதுதான் என்னுடைய ஆசை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதற்கேற்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் பேசியபோது, பல விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர் சொன்ன விஷயத்தின் காரணமாக, அவரிடத்தில் நான் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். தற்போது, ஆளுநர் அவர்கள் மசோதாவைத் திருப்பியனுப்பியவுடன், இரண்டாவது நாளே

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, தகவலைச் சொல்லி, மீண்டும் மசோதாவை அனுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இதே அவையில், திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட மசோதா மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, பிறகு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், அந்த மசோதாவை திருப்பியனுப்பிய விஷயம் ஒரு வருடமாக எங்களுக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றத்தில் அந்தப் பிரச்சினை வந்த காரணத்தினால்தான் அந்தச் செய்தி வெளியே வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதற்கு என்ன விளக்கத்தைத் தரப் போகிறார் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துகளைப்போல, அனைவரும் ஏகமனதோடு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் எங்களுக்கு இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதுபோன்று, ஒரு சிறு கரும்புள்ளிகூட இதிலே வரக்கூடாது என்ற அதே உணர்விலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், MCI Notification–ல், NEET என்ற **முதன்முதலாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வந்தது என்ற உண்மையை, வரலாற்றைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்வபெருந்தகை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செல்வபெருந்தகை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 பிப்ரவரி 8] *[பேரவைத் தலைவர்]*

அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், பேசுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் பேசிய ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு தலைவர் அவர்களே, நீட் தேர்வு கொண்டு வந்தது நீங்களா, நாங்களா என்று பேசிக்கொண்டிருந்தால் அதன்மீது விவாதங்கள் போய்க்கொண்டே இருக்கும். இப்போது நமக்கு இருக்கிற பிரச்சினை, தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வு தேவையில்லை என்பதை வலியுறுத்துவதற்காக மீண்டும் ஒரு முறை நாம் அத்தனைபேரும் ஒன்றாகக்கூடி ஒரு சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில்தான் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார். நாம் அனைவரும் உட்கார்ந்திருக்கிறோம். எனவே, மீண்டும் மீண்டும் பழைய கதைகளைக் கூறினால், அதில் பிரச்சினை வந்துகொண்டேதான் இருக்கும். அதற்கு முடிவே இருக்காது. எனவே, (குறுக்கீடுகள்) சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இவர் பேசியதாக இருக்கட்டும், (குறுக்கீடுகள்) அது உங்களுக்குத் தெரியாது, நீங்கள் உட்காருங்கள். (சிரிப்பு) அதாவது, இவர் பேசியதாக இருந்தாலும் சரி, (குறுக்கீடுகள்) அதையும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பிரின்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செல்வபெருந்தகை, உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *டாக்டர் விஜயபாஸ்கர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Please, please, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசியவையாக இருந்தாலும் சரி, அவர்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. துரைமுருகன்] [2022 பிப்ரவரி 8

பேசியவையாக இருந்தாலும் சரி. நடந்தவைகள் அப்படியே நடந்தவைகளாக இருக்கட்டும், மீண்டும் இப்பொழுது மற்ற பிரச்சினைகளைப் பேசி, அதற்குள் போக வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர்கள் நீட் தேர்வு விலக்கு குறித்த சட்டமுன்வடிவிற்கு ஆதரவளித்து, பேசி முடியுங்கள், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் நாங்களும் இருந்துகொண்டிருக்கின்றோம். இருந்தாலும், எங்கள்மீது அவதூறு பிரச்சாரங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. வெளியிலே மக்களிடத்திலே, "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்தவில்லை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நான் முதலமைச்சராக இருந்தபோதுதான் இந்த நீட் தேர்வு வந்தது" என்ற ஒரு தவறான செய்தியை, அவதூறான செய்தியைத் தொடர்ந்து பரப்பிக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டிய கடமை எங்களிடத்திலே இருக்கின்றது. ஆகவேதான், இந்த நீட் தேர்வை எப்போது கொண்டு வந்தார்கள் என்ற விவரத்தை எங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். நீட் தேர்வு எப்போது வந்தது? இந்த வார்த்தை எப்போது முளைத்தது? எப்போது இந்த விதை தமிழகத்திலே ஊன்றப்பட்டது என்ற செய்தியைத்தான் அவர் சொல்கிறார். நடந்த உண்மையைத்தான் அவர் சொல்கிறார். நடக்காத ஒன்றையுமே அவர் சொல்லவில்லை. அதை யாரும் மறைக்கவே முடியாது. யாராலும் மறக்கவும் முடியாது. நாங்கள் எவ்வளவு பேசினாலும் தங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தின் அடிப்படையில், நீங்கள் நீக்கலாம், சேர்க்கலாம். ஆனால், வெளியிலே படித்தவர்கள் மத்தியிலேயும் சரி அல்லது இளைஞர்கள் மத்தியிலேயும் சரி, மாணவர்கள் மத்தியிலேயும் சரி, இந்தச் சட்டம் எந்த ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்வபெருந்தகை, நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், சொல்கிறேன்.

2022 பிப்ரவரி 8]

திரு. எடப்பாடி K. பழனிசாமி: Medical Council of India–ஆல் இந்தத் தேர்வு எந்த ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது என்பது நம் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும். (குறுக்கீடுகள்) ஆகவே, இதை மறைத்துச் சொல்ல வேண்டும் என்ற அவசியமே இல்லை. அதற்கு என்று ஒரு வரலாறு இருக்கின்றது. (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்வபெருந்தகை, உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: அந்த வரலாற்றை மறைத்து யாருமே பேச முடியாது. (குறுக்கீடுகள்) ஆகவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்வபெருந்தகை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செல்வபெருந்தகை உட்காருங்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். அதற்கு மதிப்பளிக்கிற வகையிலாவது, சிறிது நேரம் அமைதியாக இருங்கள். ஏனென்றால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமூக முடிவு காணுகிற அளவிற்குத்தான் முன்வந்து பேசிக்கொண்டிருக்கிறார். எனவே, தயவுசெய்து, (குறுக்கீடு) இல்லை, இல்லை, அப்படியல்ல. இரண்டாவதாக, எதை வேண்டுமானாலும் பேசுங்கள். ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார், அப்போது அடிக்கடி குறுக்கிடுவது சரியல்ல. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் நான் பேசிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) ஐயா, ஒரு நிமிடம் நான் பேசிவிடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். அதாவது, ஆளுநர் சட்டமுன்வடிவைத் திருப்பியனுப்பி வைத்திருப்பதைப் பற்றிதான் விவாதம் நடைபெறுகிறது. நீட் நுழைவுத் தேர்வை யார் கொண்டுவந்தார்கள் என்பது இப்போது விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) சரி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுங்கள்.

[*2022 பிப்ரவரி 8*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் இருவேறு கருத்துகள் எங்களுக்குக் கிடையாது. அதேவேளையில் வெளியில் வேறுவிதமான செய்தி வந்துகொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது அரசியல்ரீதியாக வருவதை. . .

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ஆகவே, அந்த அவதூறான செய்தியை, அவ்வாறு இல்லை என்ற செய்தியைத்தான், எங்களுடைய உறுப்பினர் அவர்கள் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். வேறு ஒன்றும் கிடையாது.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் பேசியதெல்லாம் அவைக்குறிப்பில்தான் இருக்கிறது. ஒன்றும் பிரச்சினையில்லை. நீங்கள் உங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர், நீங்கள் பேசுங்கள். இதை மட்டும் பேசி முடியுங்கள் டாக்டர். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர், நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள்தான் சொன்னீர்கள். 1984–ல் நுழைவுத் தேர்வு வந்தது என்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு நீட் தேர்வை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. இப்பொழுது அது பேச்சு. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நீங்களே கிளப்பிவிடுவீர்கள் போல் இருக்கிறதே! (சிரிப்பு) டாக்டர் போதும். நன்றாகப் பேசினீர்கள். Clean ஆகப் பேசினீர்கள். பல முறை பாராட்டியிருக்கிறேன். இதோடு முடியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். நிறைவாகச் சொல்லுங்கள். ஆளுநரின் கருத்தைப் பற்றி நிறைவாகச் சொல்லுங்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட கருத்துகளைச் சொன்னார்கள். 10–7–2019 அன்று இதே அவையிலே, ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்ட அந்த மசோதாவினுடைய நிலை என்னவாயிற்று என்று கேட்டபோது, அதற்கு, அது withheld

2022 பிப்ரவரி 8] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

செய்யப்பட்டிருக்கின்றது என்ற கருத்தை அப்போது நான் பதிய வைத்திருக்கின்றேன். அதோடு சேர்த்து, எதற்காக, என்னென்ன காரணங்களுக்காக மாண்புமிகு குடியரசுத் தலைவர் அதை withheld செய்திருக்கிறார் என்பதையும் பதிய வைத்திருக்கின்றேன். இப்போது நம்முடைய ஆளுநர் அவர்கள் காரணங்களைச் சொல்லியிருப்பது போன்று, குடியரசுத் தலைவர் ஏன் அதைத் திருப்பி அனுப்பினார் என்ற விளக்கமும் சட்டத் துறையின் மூலமாகக் கேட்கப்பட்டிருக்கின்றது என்ற கருத்தையும் அப்போது பதிய வைத்திருக்கின்றோம். காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை விட்டுவிடுங்கள். நீங்கள் இதை மட்டும் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், தம்பி உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். (குறுக்கீடு) முடியுங்கள், முடியுங்கள். ஆளுநரின் கருத்தை மட்டும் சொல்லி உரையை முடியுங்கள். ஆளுநரின் செய்தியுரைக்கு மட்டும் பதில் சொல்லி முடியுங்கள் தம்பி. ஏனென்றால், இப்போது நன்றாக விவாதித்தாகிவிட்டது.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: சரி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, உச்ச நீதிமன்றத்தினுடைய பல்வேறு தீர்ப்புகளைச் சுட்டிக் காண்பித்தார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலைப்பாட்டைப் பொறுத்தவரைக்கும், இது சட்டரீதியாக மிக நுணுக்கமான விஷயம், உணர்வுப்பூர்வமான விஷயம். இதை சட்டரீதியாக, நுணுக்கத்தோடு அணுக வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் பதிய வைக்க விரும்புகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, Modern Dental College Vs. State of Madhya Pradesh வழக்கில் வெளியான அந்தத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டினார்கள்.அதிலேஇந்தவழக்கைத்திரும்பமுதலிலிருந்து விசாரிக்க வேண்டுமென்று எந்த ஐந்து நீதிபதிகள் சொன்னார்களோ, அதே ஐந்து நீதிபதிகள் அடங்கிய அந்த அமர்வுதான், அதற்குப் பிறகு இந்த Modern Dental College வழக்கிலும் தீர்ப்பைக் கொடுத்தார்கள். அந்தத் தீர்ப்பை நான், என்னுடைய கையிலேயே வைத்திருக்கிறேன். அதிலே இன்னும் சொல்லப்போனால் para 106. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் அது. அந்தத் தீர்ப்புகள் எல்லாம் இருக்கட்டும்.

[*2022 பிப்ரவரி 8*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *ஒரே ஒரு வரி, ஒரு வரி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நன்றாக விளக்கமாக, சுருக்கமாக ஒரு வரியில் சொல்வீர்களே, அதை அப்படி முடியுங்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: Suggestion *தான்,* controversy *இல்லை.* Final *ஆக, நீங்கள் சொன்னதற்காக நான் முழுவதுமாகப் படிக்கவில்லை.* Para *106–ல்,* Justice Anil R. Dave *அவர்கள்* 'NEET became operative' *என்று சொல்லியிருக்கிறார். அதனால், இது மிகப் பெரிய சட்ட நுணுக்கத்தோடு அணுக வேண்டிய விஷயம். ஆகையால்,* judgement–*ம் கையில் இருக்கின்றது. ஆகையினால், சட்ட வல்லுநர்களைக் கொண்டு மிகக் கவனமாக, மிக நுணுக்கமாக இதை நாம் அணுக வேண்டும் என்பதிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *ஆகவே, இதை அரசியலாக்க வேண்டாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுகூட, இதைத்தான். இதை அரசியலாக்க வேண்டாம். இதில் அரசியல் வேண்டாம். ஏனென்றால், ஒத்த உணர்வில்தான் இருக்கிறோம். திராவிட கட்சிகள் நீட் எதிர்ப்புக் கொள்கையில், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்திலிருந்து நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, அதில் ஒரு குறிப்பைக் கூறி, அதனால் நுணுக்கமாக சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து, இதை அணுக வேண்டுமென்று கூறுகிறார். நான் கேட்க வேண்டியது, 2019–ல் அவர்கள் கொண்டு வந்த மசோதாவில், அந்த அளவிற்கு ஆராய்ச்சி செய்யாமல், வல்லுநர்களைக் கேட்காமலா அந்த மசோதாவைக் கொண்டு வந்தார்கள்? ஏற்கெனவே அவர்கள் ஒரு முறை* Bill *கொண்டு வந்தார்கள் அல்லவா? அந்த* Bill–*ல் இதையெல்லாம் செய்திருப்பார்கள் அல்லவா! அந்த அளவிற்கு நாமும் செய்திருப்போம் அல்லவா! ஏன் இப்போது புதிதாகக் கேட்கின்றார்.*

2022 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். நல்ல ஆலோசனைதான் சொல்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர் பேசும்போது குறையாக ஒன்றும் சொல்லவில்லையே! அதற்கு பதிலே தேவையில்லை. அது சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு இரத்து செய்யப்பட வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆம்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அதற்கு ஆக்கபூர்வமாக சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற கருத்தைத்தான் சொல்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனால்தான் தவறு என்று சொல்லிவிட்டேன்.*

பிற்பகல் 12–15

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஏன் என்று கேட்கிறீர்களே? நீங்களும்தான் முதலில் கொண்டு சென்றீர்கள். ஏன் திரும்பி வந்தது? இதெல்லாம் வரும். இது உச்ச நீதிமன்றத் தீர்ப்பு. உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக முடிவு செய்வது என்பது யாராலும் இயலாத ஒரு சூழ்நிலை. இதையெல்லாம் கருத்திலே கொண்டு, சட்ட வல்லுநர்களை கலந்தாலோசித்து, ஒரு நல்ல முடிவெடுத்து, நீட் தேர்வை இரத்து செய்வதற்கு இந்த அரசு எடுக்கின்ற முடிவுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மிக்க நன்றி. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிறைவாகப் பேசிவிட்டார்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தினுடைய தலைவர், மரியாதைக்குரிய திரு. கி. வீரமணி ஐயா அவர்கள், 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கியதற்காக 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்ற பட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வழங்கினார்கள்.*

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2022 பிப்ரவரி 8 (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, திராவிட இயக்கத்தின் கொள்கையில், எப்போதுமே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எள்ளளவு மட்டுமல்ல, எள் முனையளவும் நழுவாமல் உறுதியாக இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, ஏற்கெனவே, என்ன ஷரத்துகளோடு நாம் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பினோமோ, இப்போதும் அதே பிரிவின்கீழே, அதே ஷரத்துகளோடுதான் இந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றி அனுப்பவிருக்கிறோம். தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதுதான் நம் எல்லோருடைய கருத்து. அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: ஒரேயொரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: இன்னும் சொல்லப்போனால், 'கட்டுண்டு வாழோம்; பிரிவினை நாடோம்; சம நிலையில் இணைவோம்" என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கற்றுக்கொடுத்த பாடம் என்று முன்னாள் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தக் காலத்திலும் கட்டுண்டு வாழோம்; பிரிவினை நாடோம்; சம நிலையில் இணைவோம். மத்திய அரசோடு தேவைப்படுகின்ற விஷயங்களுக்கு சம நிலையில் இணைந்து, தமிழகத்திற்கு, தமிழகத்தினுடைய உரிமையை, காவேரி பிரச்சினையைப்போல, மற்ற பிரச்சினைகளைப்போல மாணவர்களுடைய உரிமையைப் பெற்றுத் தருவதில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், எடப்பாடியார் அண்ணன் மற்றும் மரியாதைக்குரிய ஓ.பி.எஸ். ஆகியோர் எல்லா காலத்திலும் உறுதியாக இருந்தார்கள். இதிலே, அரசியலைத் தவிர்த்து, விமர்சனங்களைத் தவிர்த்து, அவதூறுகளைத் தவிர்த்து, ஒற்றைப் பாதையில் நீங்கள் எடுக்கக்கூடிய சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட ரீதியாக ஆதரவு கொடுக்கும். ஒரேயொரு வேதனை என்னவென்றால், கடந்த காலத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, போதும். வேதனையை நீங்கள் பதிவு செய்ய வேண்டாம்.

2022 பிப்ரவரி 8]

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *கடந்த முறை நாம் எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானம், விளிம்பு வரைக்கும் சென்று, மாண்புமிகு மூன்று அமைச்சர்களுடைய ஒப்புதலைப் பெற்றபோது, யாரால், யார் தொடுத்த வழக்கால், உச்ச நீதிமன்றத்தில் இந்த விலக்கு பெற முடியாத நிலை ஏற்பட்டது என்பதை மட்டும், (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர்—நான் பெயரைச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் மக்களால் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் ஆட்சிமுறை நிறுவப்பட்டபோது, சென்னை மாகாணத்திலும் தேர்தல் நடந்தது. 1920 ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி ஆட்சி அமைத்தது. அது பிரிட்டிஷ் ஆட்சிக் காலம்.*

இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்களெல்லாம் சென்னை மாகாணத்தின் சட்டமன்றம் எப்படி நடக்கிறது என்பதைப் பார்க்க வந்ததாகவும், அப்போது இந்தியாவிலேயே சென்னை மாகாணத்தின் நிர்வாக நெறிமுறைப்படி, சட்டத்தினுடைய ஆட்சி நடப்பதாகவும் அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட மக்களாட்சியின் விழுமியங்களை உருவாக்கிய மாமன்றத்தில் இந்த நாள் என்பது, மிக முக்கியமான நாளாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகம் காக்க, மக்களாட்சியின் மாண்பைக் காப்பாற்றுவதற்காக, கூட்டாட்சித் தத்துவத்தை நிலைநிறுத்துவதற்காக, கல்வி உரிமையை வென்றெடுப்பதற்காக நாம் இன்று கூடியிருக்கிறோம்.

ஏதோ நீட் தேர்வுக்கு எதிராக விவாதிப்பதற்காக மட்டும் நாம் கூடவில்லை. நம்முடைய தமிழ்நாட்டு சட்டமன்றத்தின் இறையாண்மையை, உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகவும் கூடியிருக்கிறோம். பல்வேறு, இனம், மொழி, பண்பாடுகள் கொண்ட இந்தியப் பெருநாட்டை உண்மையில் காக்கும் உன்னதமான தத்துவம் என்பது கூட்டாட்சித் தத்துவம்! அந்தக் கூட்டாட்சித் தத்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

பதினாறு வயதில் அரசியல் களத்தில் நான் நுழைந்தேன். எனது பொதுவாழ்வில் மறக்க முடியாத நாளாக இந்த நாள் அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உணர்வோடுதான் நான் இந்த மாமன்றத்தில் நின்று கொண்டிருக்கிறேன்!

பிற்பகல் 12–20

நூறாண்டுகளுக்கு முன்பே சமூக நீதிக்கு அடித்தளம் போட்டது இந்தச் சட்டமன்றம். நமது அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டு வர உந்து சக்தியாக விளங்கியது இந்தச் சட்டமன்றம்.

பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு; பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு இட ஒதுக்கீடு; சிறுபான்மையின மக்களுக்கு உள் ஒதுக்கீடு; அருந்ததியின சமுதாய மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு என சமூக நீதியை வழங்கியது இந்தச் சட்டமன்றம்.

அகில இந்திய அளவில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு, ஒன்றிய அரசுப் பணிகளில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் மண்டல் கமிஷன் அறிக்கையைச் செயல்படுத்த வைத்ததும் இந்தச் சட்டமன்றம்தான்.

ஏன், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதி செய்ததும் இந்தச் சட்டமன்றம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பொறியியல் உள்ளிட்ட தொழிற்கல்வியில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கியது இந்தச் சட்டமன்றம்.

அகில இந்தியத் தொகுப்பிற்கு அளிக்கும் மருத்துவ இடங்களில், 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்த இந்தியத் துணைக் கண்டத்திற்கே பெற்றுத் தந்ததும் இந்தச் சட்டமன்றம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு இருக்கின்ற 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நாட்டிலேயே முதல்முறையாகத் தமிழ்நாட்டில் செயல்படுத்தி, சாதனை படைத்தது இந்தச் சட்டமன்றம். அதற்கான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்ய, அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து சமூக நீதியில் மாபெரும் வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியது இந்தச் சட்டமன்றம்தான்.

2022 பிப்ரவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு இருந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்து, இதே சட்டமன்றத்தில்தான் சட்டம் இயற்றப்பட்டது. அப்போது இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார். அந்த நுழைவுத் தேர்வு ஒழிப்புச் சட்டம் செல்லும் என்று கூறி, சென்னை உயர் நீதிமன்றமும், நம் நாட்டின் உச்ச நீதிமன்றமும் துணை நின்றதும் இந்த சட்டமன்றத்திற்குத்தான்.

நுழைவுத் தேர்வு வேண்டாம் என்று கூறி, குடியரசுத் தலைவர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சட்டம், தமிழ்நாட்டில் 10 ஆண்டுக் காலம் நடைமுறையில் இருந்தது. பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்விக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டிருந்தோம். கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழைகளிலிருந்தும், நடுத்தர வர்க்கத்திலிருந்தும் எண்ணற்றவர்கள் மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும் பட்டம் பெற்று, இன்று பார் போற்ற, மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய சமூக நீதி, சட்ட நீதி, ஒடுக்கப்பட்டோர் உரிமை, தமிழினத்தின் மேன்மை, மொழி மேம்பாடு ஆகிய அனைத்துக்கும் அடித்தளம் அமைத்த இந்தச் சட்டமன்றத்தில் நின்று "நீட் என்ற சமூக அநீதியை அகற்ற, இந்தச் சட்டமன்றத்தால் முடியும்; நிச்சயமாக முடியும்" என்ற தன்னம்பிக்கையுடன் நான் பேசிக் கொண்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று எட்டு மாதத்திற்குள் சிறப்புச் சட்டமன்றக் கூட்டத்தை இன்று நாம் கூட்டியிருக்கிறோம். இதேபோன்றுதான், ஆட்சிப் பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே, அதாவது, 1968 சனவரி 23 ஆம் நாள் சிறப்புச் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டினார் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். அதில்தான், தமிழ்நாட்டு மாணவர்களின் தாகத்தைத் தீர்த்து, நமது மொழியுரிமையை நிலைநாட்டிய, வரலாற்றுப் பிரகடனமாக இருமொழிக் கொள்கையை நிறைவேற்றினார், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்.

அந்தத் தீர்மானத்தில், "பல்வேறு மொழி, பண்பாடு, நாகரிகங்களைக் கொண்ட இந்தியாவில் ஒரு வட்டார மொழியை

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

மட்டும் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டிருப்பது; இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து; ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமைகொள்ளச் செய்திடும் என்று உணரப்படும் காரணத்தால், தமிழும் மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதுவரையில், ஆங்கிலமே ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்து வர வேண்டும். அதற்கு ஏற்றபடி, இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது" என்றும், "தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, 'இந்தி' மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது" என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களால் அரசியல் களத்தில் பயிற்றுவிக்கப்பட்ட நாம், இந்தியா முழுமைக்குமான சமூக நீதிக் கல்விக் கொள்கையை முன்மொழிவதற்காக இந்தச் சிறப்புச் சட்டமன்றக் கூட்டத்தில் இப்போது நாம் கூடியிருக்கிறோம். நாம் அனைவரும் ஒருங்கிணைந்து, ஒற்றுமையுடன் செயல்பட்டு, சமூக நீதியை நிலைநாட்டிட, மாணவர்களின் மருத்துவக் கல்வி தாகத்தைத் தணித்திட கூடியிருக்கிறோம். நூற்றாண்டு கண்ட வரலாற்றுப் புகழ்மிக்க கொள்கை முடிவுகளை மேற்கொண்ட உன்னதமான இந்த அவையின் இறையாண்மையைக் காப்பாற்றிட, 8 கோடி மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் இந்தச் சட்டமன்றத்திற்கு, அரசியல் சட்டம் வழங்கியுள்ள சட்டமியற்றும் அதிகாரத்தைப் பாதுகாத்திட நாம் இன்று கூடியிருக்கிறோம்.

பிற்பகல் 12–25

நீட் தேர்வு என்பது அரசமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட தேர்வு முறை கிடையாது. அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்ற தேர்வு முறையும் கிடையாது. நீட் என்பது இந்திய மருத்துவக் கவுன்சில் ஒழுங்குமுறை விதிப்படி உருவாக்கப்பட்ட ஒரு தேர்வுதான். 2010 ஆம் ஆண்டு இப்படி ஒரு தேர்வு முறை முன்மொழியப்பட்டபோதே அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களும் எதிர்த்தன. இந்தியா முழுவதும் 115 வழக்குகள் இந்தத் தேர்வுக்கு எதிராகப் போடப்பட்டன. அப்படி வழக்குப் போட்டதில்

2022 பிப்ரவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

தமிழ்நாடுதான் முதன்மை மாநிலம். இந்த வழக்குகளை மொத்தமாக உச்ச நீதிமன்றம் விசாரித்தது.

இந்தத் தேர்வு அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என்று உச்ச நீதிமன்றமே 18 ஜூலை 2013 அன்று தீர்ப்பளித்தது. அதுவும் உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதியரசரின் அமர்வே அந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அத்தோடு இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அந்தத் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

ஆனால், ஒன்றிய அரசாக பா.ஜ.க. அரசு அமைந்த பிறகு, ஒரு தனியார் பயிற்சி நிறுவனம் இந்த வழக்கை மீண்டும் கையில் எடுத்தது. உச்ச நீதிமன்றத்தில் நீட் தேர்வு குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணைக்கு வந்தவுடனே, "Judgement is recalled" என்றும் "Hear this case afresh" என்றும்தான் 11–4–2016 அன்று உச்ச நீதிமன்றம் கூறியது. இதன் அடிப்படையில்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு 24–5–2016 அன்று ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்து, நாடு முழுவதும் நீட் தேர்வு முறையைச் செயல்படுத்தியது.

நீட் தேர்வு என்பதே தனியார் பயிற்சி நிறுவனங்களுக்குச் சாதகமானதுதான். இந்தத் தேர்வின் மூலமாக மாணவ–மாணவியரிடம் இருந்து இலட்சக்கணக்கில் பணம் வசூலிக்கிறார்கள். அந்த நிறுவனங்களின் நன்மைக்காக மட்டுமே இந்தத் தேர்வு இன்றுவரை பயனுள்ளதாக இருக்கிறது.

இவ்வளவு பணத்தைச் செலுத்தி பயிற்சி பெற முடியாதவர்களுக்காகத்தான் நாம் நீட் தேர்விலிருந்து விலக்கு கேட்கிறோம்; அதற்கான மசோதாவைக் கொண்டு வருகிறோம்.

நீட் தேர்வு என்பது ஏழை, எளிய மாணவர்களது கல்வி உரிமைக்குத் தடை போடுகிறது. அவர்களது மருத்துவக் கனவில் தடுப்புச் சுவர் எழுப்புகிறது. "நீ டாக்டர் ஆக முடியாது" என்று தடுக்கிறது. "உனக்குத் தகுதியில்லை" என்று தடுக்கிறது. அதனால்தான் நீட் விலக்கு மசோதாவைக் கொண்டு வருகிறோம். அந்தத் தேர்வில் நடந்த முறைகேடுகளை நான் இந்த மாமன்றத்தில் அதிகம் விளக்கிச் சொல்லத் தேவையில்லை. இருந்தாலும், நான் சிலவற்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2019 ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக 4 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2020 ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக 5 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

2021 ஆம் ஆண்டு நடந்த தேர்வில் 15 பேர் முறைகேடு செய்ததாக ஒன்றிய அரசே மக்களவையில் கூறியிருக்கிறது. ஆள்மாறாட்டம் செய்வது, வினாத்தாள்களைத் திருடுவது, விடைத்தாள்களை மாற்றி வைப்பது என அனைத்து முறைகேடுகளும் நடந்துள்ளன. இதனை சி.பி.ஐ. வழக்காகவும் பதிவு செய்துள்ளது. நம்முடைய தமிழ்நாடு மட்டுமல்ல, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக பல்வேறு வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதியதாக உதித் சூர்யா என்ற மாணவரும், அவரது தந்தை வெங்கடேசனும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதுவரை 5 மாணவர்கள், அவர்களின் பெற்றோர் 6 பேர், ஓர் இடைத்தரகர் என 12 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதிய 10 பேரின் புகைப்படங்களை நம் மாநில சி.பி.சி.ஐ.டி. போலீசார் வெளியிட்டிருக்கிறார்கள். கோவை மாணவர் ஒருவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் இது விஷயமாக வழக்கு தொடர்ந்தார். எதற்காக என்று கேட்டால், 700–க்கு என்னுடைய மதிப்பெண் 594 என்று அக்டோபர் 5 ஆம் தேதி இணையத்தில் காட்டுகிறது. அக்டோபர் 17 ஆம் தேதி 248 என்று காட்டுகிறது. இதுசம்பந்தமாக வழக்கு போட்டிருக்கிறார். தேர்வை நடத்தக்கூடியவர்கள் இதற்கு விளக்கம் தந்தாக வேண்டும். ஆனால் அதைப்பற்றிச் சொல்லாமல், வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கு மனு போட்டார்கள். 9–2–2021 அன்று சென்னை உயர் நீதிமன்றம், "நீட் தேர்வு விடைத்தாள் முறைகேடு மோசடி வழக்கை சி.பி.ஐ.–க்கு ஏன் மாற்றக் கூடாது" என்று ஒரு கேள்வி எழுப்பியது. இன்னொரு மாணவி தனது விடைத்தாள்களில் முறைகேடு நடந்திருப்பதாகவும், தான் ஒரே ஒரு கேள்விக்கு மட்டுமே பதிலளிக்காத நிலையில், விடைத்தாளில் 11 கேள்விகளுக்கு பதிலளிக்காதது போல இருக்கிறது என்று வழக்கு போட்டிருக்கிறார்.

பிற்பகல் 12–30

நீட் தேர்வு முறைகேட்டில் ஈடுபட்ட 15 மாணவர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக மக்களவையில் ஒன்றிய அரசே 3–12–2021 அன்று அறிவித்திருக்கிறது. கடந்த 29–9–2021 அன்று உச்ச நீதிமன்றத்தில் மாணவர்கள் சிலர் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். செப்டம்பர் 12 அன்று நடந்த நீட் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளன; ஆள்மாறாட்டம் நடந்துள்ளது; எனவே தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று அதில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

2022 பிப்ரவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஆகவே, நாம் சொல்ல விரும்புவது என்னவென்றால், நீட் தேர்வு ஒன்றும் வானத்தில் இருந்து குதித்துவிடவில்லை; பல்வேறு குளறுபடிகளோடு ஏழை, எளிய மாணவர்களை தகுதி என்ற பெயரில் ஓரங்கட்டக் கொண்டுவரப்பட்ட தேர்வுமுறை. அதனால்தான் இந்தத் தேர்வை நாங்கள் எதிர்க்கிறோம்; அதிலிருந்து விலக்கு கோருகிறோம். நீட் தேர்வு என்பதைவிட, அதை 'மாணவர்களைக் கொல்லக்கூடிய தேர்வு' என்றே கூறிட வேண்டும். நீட் என்பது தேர்வு அல்ல; அது ஒரு பலிபீடம். அரியலூர் அனிதா உள்ளிட்ட பல மாணவச் செல்வங்களை, இந்தியாவின் வருங்காலத் தலைமுறையை நாம் இழந்திருக்கிறோம். அந்தக் குழந்தைகளை, இளம் பிஞ்சுகளை பெற்றோர்கள் மட்டுமல்ல; நாமும் இழந்திருக்கிறோம். தமிழ்நாடு மட்டுமல்ல; இந்திய நாடே பறிகொடுத்திருக்கிறது.

சில மாணவர்களைக் கல்லறைக்கும், சில மாணவர்களைச் சிறைச்சாலைக்கும் அனுப்பிய இந்த நீட் தேர்வு தேவையா என்பதுதான் இந்த மாமன்றத்தில் நான் எழுப்பக்கூடிய கேள்வி. நான் மட்டுமல்ல; ஒட்டுமொத்த மாணவச் சமுதாயமும் பெற்றோர்களும் எழுப்பக்கூடிய கேள்விதான் இது. அதனால்தான் நீட் தேர்விலிருந்து விலக்குப் பெறும் மசோதாவை நாம் நிறைவேற்றினோமே தவிர; ஏதோ எடுத்தேன், கவிழ்த்தேன் என்று நிறைவேற்றிவிடவில்லை. பல மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்த இந்த நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுவதே தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நன்மை பயக்கும். நீட் தேர்வு, சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதா என்பதைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்திட, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் டாக்டர் ஏ.கே. ராஜன் தலைமையில் *10–6–2021* அன்று ஒரு குழு அமைக்கப்பட்டது; மக்களிடம் கருத்து கேட்கப்பட்டது. அந்தக் கருத்துகளின் அடிப்படையில், *14–7–2021* அன்று அந்தக் குழு *193* பக்க அறிக்கையை அரசுக்கு அளித்தது. அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவம் படிக்க இயலவில்லை என்று சொன்னது; தகுதி, திறமை என்று பேசுகிறார்களே; அந்தத் தகுதி, திறமை கூட இந்தத் தேர்வில் அடிபடுகிறது என்று இக்குழு தரவுகளுடன் சொன்னது.

இந்த அறிக்கைமீது விரிவான பரிந்துரைகளை அளிக்க தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை முதலமைச்சர் என்கிற முறையில் நான் அமைத்தேன். இறுதியில் எல்லாவற்றையும் பரிசீலித்து, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

விலக்களிக்க வேண்டும் என்ற மசோதா இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இவ்வளவு விரிவாக ஆராய்ந்து, உரிய தரவுகளுடன்தான் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றினோம். மொத்தம் இந்த அவையில் இருக்கக்கூடிய 234 உறுப்பினர்களில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் சேர்த்து, 4 பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நீங்கலாக, மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் ஆதரவோடும் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வை மட்டுமல்ல; இந்த மாமன்றத்தின் இறையாண்மை உணர்வையும் எதிரொலித்தது.

அதனை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும். மாறாக, அதுகுறித்து எந்த முடிவும் எடுக்காமல் 142 நாட்கள் அவர் வைத்திருந்தார். அதுகுறித்து, நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திய நிலையில், மீண்டும் நமக்கே திருப்பி அனுப்பி உள்ளார். அந்த மசோதாவை நிராகரிப்பதற்காக அவர் சொன்ன காரணங்கள் சரியானவை அல்ல என்பதை இந்த மாமன்றத்தில் நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு குறித்து ஆராய்வதற்காக தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நீதியரசர் ஏ.கே. ராஜன் குழுவின் அறிக்கை ஊகங்களின் அடிப்படையிலானது என்று தெரிவித்துள்ளார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள். அரசாணை எண் 283, மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 10–6–2021–ன்படி நீதியரசர் ஏ.கே. ராஜன் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இடம் பெற்றிருந்தார்கள். இந்த உயர்மட்டக் குழுவின் ஆய்வு வரம்புகளும் வெளியிடப்பட்டன. பொது மக்கள் அனைவரிடமிருந்தும் கருத்துகளை இக்குழு கேட்டுப் பெற்றது. மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் ஆணையத்தில் வைக்கப்பட்டிருந்த கருத்துக்கேட்புப் பெட்டியில் போடப்பட்ட மனுக்கள் என ஆணையத்துக்கு பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களது கருத்துகளை வழங்கியிருந்தார்கள்.

பிற்பகல் 12–35

இந்த வழிமுறைகளின் வாயிலாக 86 ஆயிரத்து 342 பேர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளை ஆராய்ந்து தனது

2022 பிப்ரவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

விரிவான பரிந்துரைகளை நீதியரசர் ஏ.கே.ராஜன் குழு அரசுக்கு 14–7–2021 அன்று அளித்தது. அதாவது தனிப்பட்ட சிலரின் ஊகங்களின் அடிப்படையில் அல்ல; சுமார் ஒரு இலட்சம் பேரின் கருத்துகளைக் கேட்டுப் பெற்று இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்தப் பரிந்துரை அறிக்கையில் சமுதாயத்தில் பின்தங்கியோர் மருத்துவக் கல்வியைப் பெறும் கனவிற்கு இடையூறாகவும், சமூகப் பொருளாதாரத்தில் வளமிகுந்த பிரிவினருக்கு சாதகமாகவும் இருந்து, எம்.பி.பி.எஸ் மற்றும் உயர் மருத்துவப் படிப்புகளிலுள்ள பலதரப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை நீட் தேர்வானது குறைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் ஊகம் அல்ல. இதற்கான புள்ளிவிவரமும் அந்த அறிக்கையில் விரிவாக உள்ளது.

அரசுப் பள்ளியின் மாணவர்கள், பெற்றோரின் ஆண்டு வருமானம் 2.50 இலட்சம் ரூபாய்க்கும் குறைவாகக் கொண்டுள்ளவர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் பிரிவுகளைச் சேர்ந்த வசதி குறைந்தவர்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் இந்த அறிக்கையில் புள்ளிவிவரங்களோடு சொல்லப்பட்டுள்ளது.

'நீட் தேர்வு தகுதிக்கு எதிரானது' என்று இந்த அறிக்கை சொல்வதை ஆளுநர் விமர்சித்துள்ளார். இதனை மறுக்கும் ஆதாரப்பூர்வமான தகவல்கள் நீதியரசர் ஏ.கே. ராஜன் குழுவின் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை தேர்வானவர்களில் கிராமப்புற ஏழை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் பயின்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்த அறிக்கை சொல்கிறது.

தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் இடம் பெற்றவர்களையும், நீட் தேர்வால் பலன் பெற்றவர்கள் என்று யாரும் தவறாகக் கணக்கிட்டுக் கொள்ளக் கூடாது என்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இயற்பியல், வேதியியல், உயிரியல் தேர்வுத் திறன் குறித்து இந்த அறிக்கையில் இல்லை என்று ஆளுநர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதும் அறிவியல் பிரிவு மாணவர்கள் அனைவருமே இந்த மூன்று

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

பாடங்களையும் படிக்கிறார்கள். எனவே, இம்மூன்று பாடங்களில் தேர்ந்தவர்கள்தான் பன்னிரண்டாம் வகுப்பில் உயர்ந்த இடங்களைப் பெறுகிறார்கள். அதனால்தான் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்ணே போதுமானது என்று நாங்கள் சொல்கிறோம். இன்னொரு தேர்வு தேவையில்லை என்று நாம் இங்கே குறிப்பிடுகிறோம். நீட் தேர்வு வருவதற்கு முன்பு, 90 விழுக்காட்டுக்கும் மேலான இடங்களை மாநிலப் பாடத்திட்டத்தின்படி பயின்ற மாணவர்கள்தான் பெற்று வந்தார்கள். ஆனால், நீட் தேர்வுக்குப் பின்னர், மருத்துவப் படிப்பு சேர்க்கையில் மாநிலப் பாடத்திட்டத்தின்படி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

கருப்பாக உள்ளவர்கள் உள்ளே வரக்கூடாது என்பது எத்தகைய பாகுபாடோ, அதைப்போல மாநிலப் பள்ளிக் கல்வித் திட்டத்தின்கீழ் படித்தவர்களது புத்தகங்களில் இருந்து வினாத்தாள் தயாரிக்காததும் மிகப்பெரிய பாகுபாடுதான்.

நீட் என்பது கல்விமுறை அல்ல. அது பயிற்சிமுறை. இது தனியார் பயிற்சி மையங்களைத்தான் ஊக்குவிக்கும். தனிப் பயிற்சி பெற முடியாதவர்கள், கல்வி பெறத் தகுதியற்றவர்கள் என்ற பாகுபாட்டை உருவாக்குகிறது.

ஒரு மாணவர் இரண்டு மூன்று ஆண்டுகள் தனிப் பயிற்சிக்காக ஒதுக்க வேண்டும்; இலட்சக்கணக்கில் செலவு செய்ய வேண்டும். இதனை பொருளாதாரத்தில் பின்தங்கிய, ஏழை, எளிய மாணவர்களால் எப்படிச் சமாளிக்க முடியும் என்பதுதான் திரும்பத் திரும்ப நாம் எழுப்புகிற கேள்வியாகும்.

கட்டணம் செலுத்தி பயிற்சி எடுக்க முடியாதவர்களால் மருத்துவப் படிப்புக்கு உள்ளே நுழைய முடியாது என்பதும், கட்டணம் செலுத்தி இரண்டு மூன்றாண்டு காலம் பயிற்சி பெற முடிந்தவர்களால் மட்டுமே உள்ளே நுழைய முடியும் என்பதும் இந்த 21 ஆம் நூற்றாண்டில் மாபெரும் அறிவுத் தீண்டாமை! தகுதி என்ற போர்வையில் உள்ள இந்தத் தீண்டாமை அகற்றப்பட வேண்டாமா? அதற்காகத்தான் நீட் விலக்கு மசோதாவை மீண்டும் இங்கே நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

வேலூர் கிறித்தவ மருத்துவக் கல்லூரி வழக்கைப் பற்றி இந்த அவையில்கூட எல்லோரும் பேசினார்கள். ஆளுநர் அவர்கள் அந்த வழக்கை மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். இந்த வழக்கு,

2022 பிப்ரவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

"சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளுக்கு நீட் தேர்வு எதிரானதா?" என்பது தொடர்புடையதாகும். அந்த வழக்கு மாநிலச் சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம் குறித்தது அல்ல. ஆகவே, அந்த வழக்கிற்கும், நாம் கொண்டுவரவிருக்கக்கூடிய நீட் விலக்கு மசோதாவுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

பிற்பகல் 12–40

மாடர்ன் பல் மருத்துவமனைக்கும் மத்திய பிரதேச அரசுக்குமான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் அமர்வில் நடந்தது. உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை குறித்து சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கே உண்டு என்று தீர்ப்பளித்தது. அதே வழக்கில் நீதியரசர் பானுமதி வழங்கிய தனித் தீர்ப்பில், மாணவர் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம், மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டதே என்று அவர்கள் தீர்ப்பளித்தார்கள். மாநிலச் சட்டமன்றத்திற்கு இருக்கக்கூடிய சட்டமியற்றும் அதிகாரத்தின்படிதான் நாம் நீட் தேர்வுக்கு எதிரான சட்டமுன்வடிவை நிறைவேற்றி இருக்கிறோம்.

அரசமைப்பு ரீதியாக நீட் தேர்வு தேவைப்படுவதாக ஆளுநர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். சமூகத்திலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியவர்களது உரிமைக்காக எந்தச் சட்ட ஏற்பாட்டையும் செய்துகொள்ளலாம் என்று அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. அந்த அடிப்படையில்தான் நாங்கள் இந்தச் சட்ட மசோதாவை மீண்டும் கொண்டு வருகிறோம். அரசமைப்புச் சட்டம், பாகுபாட்டுக்கு எதிரானது. ஆனால், நீட் தேர்வு பாகுபாடு காட்டுகிறது. அரசமைப்புச் சட்டம் சமூகநீதியை வலியுறுத்துகிறது. ஆனால், நீட் தேர்வு சமூகநீதிக்கு எதிரானது. அரசமைப்புச் சட்டம், சட்டத்தின் நீதியைப் பேசுகிறது. ஆனால், நீட் தேர்வு, பணக்கார நீதியைப் பேசுகிறது. சமத்துவம் என்பதுதான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிநாதம். ஆனால், நீட் தேர்வு, சமத்துவத்துக்கு முற்றிலும் எதிரானது. அரசமைப்புச் சட்டம் வலியுறுத்தும் அனைத்து அடிப்படை உரிமைகளுக்கும் எதிரானது நீட் தேர்வு. அதனால்தான் நீட் தேர்வில் இருந்து விலக்கு கேட்கிறோம். என்னுடைய வேதனையெல்லாம், ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களைப் பாதிக்கும் மிக மோசமான ஒரு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

தேர்வு குறித்து, அது மோசமானதுதான் என்று இவ்வளவு நீண்ட நேரம் வாதிட வேண்டியதாக இருக்கிறதே என்பதுதான் என் வருத்தம். நாம் சொல்வது புரிய வேண்டியவர்களுக்கு, இன்னமும் புரியாமல் இருக்கிறதே என்பதும்தான் என் வருத்தம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, டெல்லி அமைச்சர் ஒருவரிடம், கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை விவகாரம் பற்றி போன் செய்து பேசினாராம். அப்போது எதிர்முனையில் பேசியவருக்கு, கள்ளக்குறிச்சி என்ற பெயரைப் புரிந்துகொள்ளவே 15 நிமிடங்கள் ஆனது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதே மாதிரி நீட் தேர்வின் மோசமான அம்சங்களையே நாம் ஐந்தாண்டுக்காலமாக விளக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்னும் அவர்களுக்குப் புரியவில்லை. உண்மையில், புரிந்துகொள்ள மறுக்கிறார்கள் என்றுதான் கருத வேண்டியுள்ளது. ஆனால், நாம் வெற்றி பெறும்வரை நமது இந்தப் போராட்டத்தை விடமாட்டோம் என்பதை இந்த மாமன்றத்தில் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏதோ நீட் விவகாரம் மட்டுமல்ல என்பதை நான் தொடக்கத்தில் சொன்னேன். ஒரு சட்ட மசோதாவை நிறைவேற்றினோம்; அதை ஆளுநர் திருப்பி அனுப்பினார் என்று மட்டும் நான் இதைப் பார்க்கவில்லை. யாரும் அப்படிப் பார்க்கமாட்டீர்கள் என்பதையும் நான் அறிவேன். இந்தச் சட்டமுன்வடிவைத் திருப்பி அனுப்பியதன்மூலமாக நமது தமிழ்நாட்டின் உரிமை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமன்றத்தின் இறையாண்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. மாநில சுயாட்சிமீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கூட்டாட்சித் தத்துவம் தலைகவிழ்ந்து நிற்கிறது. அதுதான் வேதனைக்குரியது. அதுதான் கவலையளிக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கெல்லாம் முன்னுதாரணமான, வழிகாட்டியான தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவை நிறுத்தி வைக்க முடியும், உதாசீனப்படுத்த முடியும் என்றால், இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் மாநிலங்களின் கதி என்ன? அரசியல் சட்டம் வகுத்துத் தந்துள்ள ஒன்றிய–மாநில அரசுகளின் உறவு எங்கே போகும்? பல்வேறு இனம், மொழி, கலாச்சாரம், பண்பாடு கொண்ட மக்களின் நிலைமை என்ன? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின்

2022 பிப்ரவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

கொள்கை முடிவை, வெறும் நியமனப் பதவியில் அமர்ந்திருக்கும் ஓர் ஆளுநர் மதிக்காமல் திருப்பி அனுப்புவது மக்களாட்சித் தத்துவத்துக்கே எதிரானது அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) "பிறகு எந்த நம்பிக்கையில் மக்கள் வாக்களிப்பார்கள்? யாரை நம்பி வாக்களிப்பார்கள்" என்பதுதான் நாம் எழுப்ப வேண்டிய கேள்வி ஆகும்.

'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதுதான் நம்முடைய இந்தியத் துணைக்கண்டத்தின் பண்பாடு. அதனைச் சிதைக்கலாமா? இவற்றையெல்லாம் சிந்திக்கத் தெரிந்தவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வலிமையான அரசா, நேர்மையான அரசா என்றால், நேர்மையான அரசுதான் அனைவரும் விரும்பும் அரசாக இருக்க முடியும். வலிமையான சாம்ராஜ்யங்கள் வரலாற்றின் பக்கங்களில் மட்டும்தான் இருக்கின்றன. ஆனால், பாகுபாட்டுக்கு எதிரான அசோகர்தான், மக்களால் இன்றும் நினைக்கப்படுகிறார். பலதரப்பட்ட மனிதர்களை உள்ளடக்கிய இந்திய நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்தை சீர்குலைக்கும் முயற்சியாக சமீப காலக் காட்சிகள் அமைந்து வருவது வருத்தம் அளிப்பதாக உள்ளன.

இந்த நேரத்தில் நான், கடந்த காலத்தை சிறிது திரும்பிப் பார்க்கிறேன். சமூகநீதி மட்டும்தான் திராவிட இயக்கத்தின் கொடை என்று சிலர் நினைக்கிறார்கள். மாநில சுயாட்சியும் திராவிட இயக்கத்தின் கொடைதான். 1918 அக்டோபர் 2 அன்று இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பேசியவர், நீதிக்கட்சித் தலைவரான திரு. டி.எம். நாயர் அவர்கள். அவர்தான் 1917 ஆம் ஆண்டிலேயே மொழிவாரி மாநிலங்களுக்காகக் குரல் கொடுத்திருக்கிறார். மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். அப்படிச் செய்தால்தான் கூட்டாட்சி முறை வெற்றி பெறும் என்றும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். முன்னோடித் தலைவரான டி.எம். நாயர் அவர்களை இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர் சொல்லி 100 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும் மாநிலங்களின் உரிமைக்காக இன்னமும் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 12–45

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமுன்வடிவின்மீது 15–7–1967 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மாமன்றத்தில் உரையாற்றியபோது, "மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

உள்ள தொடர்புகள் எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும், சட்டப்படி இருக்கின்ற தொடர்புகள், நடைமுறையிலே உள்ள தொடர்புகள், இவை திருத்தி அமைக்கப்பட வேண்டும். அதற்கு அரசியல் சட்டத்தையேகூட திருத்த வேண்டுமென்றாலும், அதற்கும் தயக்கம் கூடாது. அதற்கான ஒரு கமிஷன் அமைத்து விசாரிக்கப்பட வேண்டும் என்பதைதான் இதுவரை வலியுறுத்திக் கொண்டு வந்ததைப் போலவே, இனியும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்படி முழங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களை வியப்போடு நான் திரும்பிப் பார்க்கிறேன்.

"நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேராவண்ணம் மாநில சுயாட்சி அடிப்படையில் மத்திய–மாநில உறவுகளை ஆராய" சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ராஜமன்னார் அவர்கள் தலைமையில் 22–9–1969 அன்று குழு அமைத்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை நான் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன். 27–5–1971 அன்று ராஜமன்னார் குழு அறிக்கையை அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அந்த அறிக்கையைப் பெற்றுக் கொண்டு, "These are important issues and we intend to consult all the Chief Ministers" என்று பதிலளித்து, 22–6–1971 அன்று பெறப்பட்ட கடிதம் இந்த அவையின் குறிப்புகளை அலங்கரிப்பதைப் புரட்டிப் பார்த்து நான் பெருமிதம் அடைகிறேன். அனைத்திற்கும் மேலாக, மாநில சுயாட்சித் தீர்மானம் 16–4–1974 அன்று இதே அவையில் கொண்டுவரப்பட்டு, ஏப்ரல் 20 ஆம் நாள் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க வாதங்களை மீண்டும் படித்துப் பார்த்து, இந்தச் சட்டமன்றத்தின் நீண்ட நெடிய வரலாற்றை எண்ணி உள்ளபடியே நான் பெருமிதப்படுகிறேன்.

அதிலும் குறிப்பாக, தீர்மானத்தின் மிக முக்கியமான வாசகமாக, "மத்தியில் கூட்டாட்சி–மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் ராஜமன்னார் குழு அறிக்கையை ஏற்று, இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இந்தப் பேரவை முடிவு செய்கிறது" என்று முன்மொழிந்த தலைவர்தான் நம்முடைய தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

2022 பிப்ரவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

மாநிலங்கள் மட்டும், மத்திய அரசின் தேவையான அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டு கிடப்பானேன்? இந்தக் கேள்வியின் நீண்டநாளைய தாகத்தைத் தீர்க்கும் நெல்லிக்கனியாகத்தான் இன்று, இந்த மாபெரும் சபைதனில் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த முத்தமிழறிஞர் எத்தகைய தொலைநோக்குப் பார்வை கொண்டவர் என்பதை எண்ணி எண்ணிப் பெருமை கொள்கிறேன்.

அன்றைய நாள், "இந்திய அரசியல் அரங்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் நாம் ஏற்றி வைக்கும் இந்தச் சுடர் விளக்கு ஒளிவிட வேண்டும்" என்றவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். அதைத்தான் இன்றைக்கு நாம் எதிர்பார்க்கிறோம். நீட் விலக்கு சட்டமுன்வடிவை நிறைவேற்றி மீண்டும் அனுப்பி வைப்பதன் மூலமாக இந்தியாவுக்கே ஓர் ஒளிவிளக்கை நாம் ஏற்றி வைக்கிறோம். தி.மு.க. எதிர்க்கட்சியாகவும், அ.தி.மு.க. ஆளுங்கட்சியாகவும் அன்றைய தினம் இருந்தாலும், நாம் இணைந்து, ஒருமுகமாக நின்று நீட் விலக்கு மசோதாவை கடந்த 1–2–2017 அன்று இதே அவையில் நிறைவேற்றினோம்.

அந்த மசோதாவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்படாமல் 27 மாதங்கள் கிடப்பில் போட்டு வைக்கப்பட்டது. இறுதியில் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. அப்போதே இரண்டாவது முறையாக நீட் விலக்கு சட்ட மசோதாவை நிறைவேற்றி அனுப்பி வைத்திருக்கலாம். அந்த வாய்ப்பு தவறிப் போனது. அதைப்பற்றியெல்லாம் நான் இப்போது பேச விரும்பவில்லை. அது தேவையும் இல்லை. இந்தச் சூழலில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் குழு அமைத்தோம். அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற சட்டமுன்வடிவை 13–9–2021 அன்று நிறைவேற்றி அனுப்பினோம். அரசியல் சட்டப்படி ஆளுநர் அவர்களுக்கு உள்ள அதிகாரம் என்ன? இதை நான் சொல்வதை விட, ஒன்றிய–மாநில உறவுகள் பற்றி ஆராய அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் பரிந்துரையில் சொல்லப்பட்டுள்ளதை இந்த அவையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுப் பட்டியலில் (Concurrent List) உள்ள பொருள் குறித்து மாநிலச் சட்டமன்றத்திற்கு உள்ள சட்டமியற்றும் அதிகாரத்தைப் பாதுகாக்கவே அரசியல் சட்டத்தில் 254 (1) என்ற பிரிவு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

உருவாக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்துடன் முரண்படும் ஒரு சட்டத்தை மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றினால், அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கக் கோரி ஆளுநருக்கு மாநில அமைச்சரவை அறிவுறுத்தலாம். மாநில அமைச்சரவை அப்படி அறிவுறுத்தினால், ஆளுநர் அதன்படி உடனடியாகச் செய்தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டப் பிரிவு 254(1)–ன்கீழ் மாநிலச் சட்டமன்றம் சட்டம் நிறைவேற்றினால், அரசியல் சட்டப்பிரிவு 200–ன்கீழ் அதற்கு ஒப்புதல் வழங்கக்கூடிய அதிகாரத்தை ஆளுநர் அமைச்சரவை முடிவுக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டும். 'The Governor must abide by the advice of the Council of the Ministers.'

பிற்பகல் 12–50

ஆளுநருக்கு அனுப்பப்படும் சட்டமுன்வடிவு தன் சொந்தக் கொள்கைக்கு மாறாக உள்ளது என்று நிராகரிக்காமல், அமைச்சரவை என்ன அறிவுரை வழங்குகிறதோ, அதன்படிதான் நடக்க வேண்டும். அதைத்தான் 2006 இல் 'நுழைவுத் தேர்வு ரத்து' செய்வதற்கான சட்டமுன்வடிவை நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து, இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அந்த வரலாற்றைப் படைத்திருக்கிறார்.

நமக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தின் அடிப்படையில்தான், 13–9–2021 அன்று நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க சட்டமுன்வடிவினை நாம் நிறைவேற்றினோம். அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க வேண்டியது ஆளுநரின் அரசியல் சட்டக் கடமை. அந்தக் கடமையை முறையாக இனியாவது ஆளுநர் செய்வார் என நான் நினைக்கிறேன், எதிர்பார்க்கிறேன். நான் மட்டுமல்ல, நீங்களும் எதிர்பார்க்கலாம். அதுதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின், சட்டமியற்றும் அதிகாரத்திற்குட்பட்டு ஆளுநர் நிறைவேற்ற வேண்டிய கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றவில்லை என்பதால் நானே நேரில் ஆளுநர் மாளிகைக்குச் சென்றேன். ஆளுநரிடம் பல முறை நான் வலியுறுத்தியிருக்கிறேன். நம்முடைய மூத்த அமைச்சர், அவையின் முன்னவர், மாண்புமிகு துரைமுருகன் அவர்களும் நேரில் சந்தித்து ஆளுநரை வலியுறுத்தினார். நம் மாநில எம்.பி.க்கள் எல்லாம் குடியரசுத் தலைவரைச் சந்திக்க முயற்சி செய்து, அவரது அலுவலகத்தில் மனுவினை அளித்து,

2022 பிப்ரவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

வலியுறுத்தினார்கள். ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து விளக்கியிருக்கிறோம். எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய அ.தி.மு.க.–வைச் சேர்ந்த எம்.பி.க்கள், அதேபோன்று பல்வேறு கட்சிகளில் இருக்கக்கூடிய எம்.பி.க்கள் அனைவரும் நேரடியாகச் சென்று, சொல்லியிருக்கிறோம். இந்த நிலையில்தான், ஏறக்குறைய 142 நாட்கள் கழித்து, நீட் விலக்கு சட்டமுன்வடிவைத் திருப்பி அனுப்பி, சட்டமன்றம் மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார், ஆளுநர் அவர்கள். இந்த அசாதாரணச் சூழலில், அரசியல் சட்டப்பிரிவு 254(1)–ன்கீழ் சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய சட்டமியற்றும் அதிகாரத்தைக் கேள்வி கேட்கக்கூடிய வகையில், மாண்புமிகு ஆளுநர் அவர்களின் செயல் இருக்கிற காரணத்தினால், கடந்த 5–2–2022 சனிக்கிழமை அன்று சட்டமன்றத்தில் இடம் பெற்றிருக்கக்கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தினை நடத்தினோம். அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்தான், இன்றைக்கு நீட் விலக்கு சட்டமுன்வடிவினை இந்த அவையில் மீண்டும் நான் முன்மொழிகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், 30–3–1967 இல் இதே அவையில், ஆளுநர் உரைமீதான விவாதத்தில் பேசியபோது, "கவர்னர் பதவியே வேண்டாமென்று முதன் முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன நேரத்தில், அது ரொம்ப பைத்தியக்காரத்தனம் என்று பேசிக் கொண்டிருந்த இந்த அரசியல் வட்டாரத்தில், ஒரு பகுதி இன்றையதினம் அதே கண்ணோட்டத்திற்கு வந்திருப்பதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்" என்று குறிப்பிட்டதை நினைவுபடுத்திப் பார்க்கிறேன்.

அது போன்றதொரு சூழலை, நமது ஆளுநர் நிச்சயம் உருவாக்க மாட்டார் என்று நான் நம்புகிறேன். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலனை எண்ணி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தின்கீழ் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும் இந்த நீட் விலக்கு சட்டமுன்வடிவினை காலந்தாழ்த்தாமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பார் என்று நான் நம்புகிறேன். காலங்காலமாக மறுக்கப்பட்ட கல்வி உரிமையைக் காக்க, தமிழ்நாட்டின் மாநில உரிமைகளைக் காக்க, பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஏழை எளிய, விளிம்பு நிலை,

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

கிராமப்புற மக்களின் நலனைக் காக்க, இந்தச் சட்டமுன்வடிவை அனைவரும் நிறைவேற்றித்தர வேண்டும் என்று உங்களை எல்லாம், நான் மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

'மாநிலங்கள் அதிகளவில் அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்' என்ற பேரறிஞர் அண்ணாவின் இலக்கை அடையவும், 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற கலைஞரின் முழக்கத்தை வென்றெடுக்கவும், இந்த நாள் மிக முக்கியமான நாளாக அமைந்துள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவை முன்மொழிவதன் மூலமாக நானும், அதனை ஆதரித்து, வாக்களிப்பதன் மூலமாக நீங்களும் செய்யும் செயல் என்பது, இந்தியாவின் ஜனநாயக நெறிமுறைகளைக் காப்பாற்றும். ஒற்றையாட்சித் தன்மை கொண்ட நாடாக இந்தியா மாற்றப்படாமல் தடுக்கும். இறையாண்மை என்பது மக்களாட்சியில் சட்டமன்றத்திற்கு உள்ள சட்டமியற்றும் அதிகாரம் என்பதை நிலைநாட்டும். இந்தியத் துணைக்கண்டமானது அனைத்து தேசிய இனங்களுக்குமான நாடு என்பதைப் பிரகடனப்படுத்தும். அத்தகைய அரசியல் சட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாக இந்த நாளை மாற்றியமைக்க வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்திய மாநிலங்களின் உரிமைகளைக் காக்கும் பெரும் பொறுப்பைச் செய்வதற்கான வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க! நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிகச் சிறப்பாக தன்னுடைய வாதத்தை எடுத்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த அவை நன்றி தெரிவிப்பதோடு, இந்த அரசு பொறுப்பேற்றது முதல், ஆளுநர் அவர்களின் முதல் உரையில், 2021 ஜூன் மாதம் 21 ஆம் தேதி, பக்கம் 27, 37–வது நம்பரில் "சமூக நிலையிலும், கல்வி நிலையிலும் பின்தங்கிய மாணவர்களுக்கு நீட் தேர்வு ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் குறித்து ஆராய, நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்களது தலைமையில் ஒரு குழுவை இந்த

2022 பிப்ரவரி 8] [பேரவைத் தலைவர்]

அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று தமிழ்நாட்டில் நீட் தேர்வால் மாணவர்கள் பாதிப்படையாமல் இருக்கத் தேவையான சட்டங்களை நிறைவேற்றி, அத்தகைய சட்டங்களுக்கு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்" என்று நம்முடைய மாண்புமிகு முன்னாள் ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள், 2021 ஜூன் மாதம் 21 ஆம் நாளன்று நம்முடைய சட்டமன்றத்திற்கு அவர்கள் அளித்த உரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று, இன்றைய ஆளுநர் அவர்கள் 2022 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 5 ஆம் நாள், பக்கம் 46, 66–வது நம்பரில் அவர் குறிப்பிட்டுள்ளது, "பொதுவாக நுழைவுத் தேர்வுகள் கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு சமனற்ற தளத்தையும், பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன. எனவே, தொழிற்படிப்புகளில் மாணவர்களின் சேர்க்கைக்கு நீட் போன்ற நுழைவுத் தேர்வுகள் தேவையற்றது என்ற இந்த அரசின் நிலைப்பாட்டை தொடர்ந்து வலியுறுத்துவோம்" என்று இந்தப் பேரவையில் மிகத் தெளிவாக நம்முடைய ஆளுநர் உரையில் இன்றைய ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அவையின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்போது பேரவையின் முடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தங்களால் அவைமுன் வைக்கப்பட்ட 1–2–2022 ஆம் நாளிடப்பெற்ற மாண்புமிகு ஆளுநரின் செய்தியுரையுடன் திருப்பியனுப்பப்பட்ட, 13–9–2021 அன்று பேரவையால் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்ற 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) ஆகிய இரண்டின்மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களது ஒருமித்த கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன். 1–2–2022 ஆம் நாளிடப்பெற்ற மாண்புமிகு ஆளுநர் அவர்களின் செய்தியுரையில் தெரிவிக்கப்பெற்றுள்ள கருத்துகள் ஏற்புடையதாக இல்லை என்பது இப்பேரவை உறுப்பினர்கள் அனைவரின் கருத்தாக அமைந்துள்ளது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 பிப்ரவரி 8

எனவே, 13–9–2021 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பெற்று, மாண்புமிகு ஆளுநர் அவர்களால் 1–2–2022 ஆம் நாளன்று திருப்பியனுப்பப்பெற்ற, 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) மறு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டுமெனக் கோருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 13–9–2021 அன்று பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்று, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) குறித்து 1–2–2022 ஆம் நாளிடப்பெற்ற மாண்புமிகு ஆளுநரின் செய்தியுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் ஏற்புடையதாக இல்லை என இப்பேரவை முடிவு செய்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 14 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

2022 பிப்ரவரி 8] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) மீண்டும் நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு மீண்டும் ஏற்கப்பட்டது.

இந்தப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்றே நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பெறும்.